Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 11

செவ்வாய்க்கிழமை
07 டிசெம்பர் 2021

கார்த்திகை 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**
நேற்று 741
மொத்தம் 568,423

**உயிரிழப்பு**
நேற்று 23
மொத்தம் 14,484

**குணமடைவு**
542,688

# மக்கள் வாழ்வதற்கு தகுதியற்ற நாடு இலங்கை!

### ஐக்கிய மக்கள் சக்தி அறிவிப்பு



கொழும்பு, டிசெம்பர் 7
எந்தவகையிலும் வாழத்தகுதியற்ற நாடாக தற்போதைய அரசாங்கம் இலங்கையை மாற்றியமைத்திருக்கின்றது. இந்த நிலையில், அரசு தேர்தலொன்றுக்கு முகங்கொடுத்தால், 2015 ஆம் ஆண்டில் எதிர்கொண்டதைவிடவும் மிகமோசமான தோல்வியைச் சந்திக்கும் – இவ்வாறு, ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதயகுமார் தெரிவித்தார். 15

## நேற்றும் இரண்டு பேர் சடலங்களாக மீட்பு

முல்லைக் கடலில் இறந்தோர் எண்ணிக்கை 3ஆக உயர்வு



முல்லைத்தீவு, டிசெ. 7
முல்லைத்தீவுக் கடலில் குளிக்கச்சென்று காணாமற்போயிருந்த ஏனைய இருவரின் சடலங்களும் நேற்று மீட்கப்பட்டன. அவர்கள் மூழ்கிய இடத்திலிருந்து சில 15

## 276 கிலோ கஞ்சா மாதகலில் மீட்பு

காணி அபகரிப்பு எதிர்ப்புக்குப் பழிவாங்கலா?

யாழ்ப்பாணம், டிசெ. 7
இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாதகல் கடற்பரப்பில் 276 கிலோகிராம் கஞ்சா பொதிகளாக நேற்று மீட்கப்பட்டது. இந்தநிலையில், அவற்றைக் கடத்தி வந்தனர் என்ற குற்றச்சாட்டில் அதே பகுதியைச்சேர்ந்த இருவரை கடற்படையி 15

## புதிய அடையாளத்துடன் மீள விற்பனைக்கு 'காஸ்'




கொழும்பு, டிசெ. 7
நுகர்வோர் விவகார அதிகாரசபையின் வழிகாட்டல்களுக்கமைய, சமையல் எரிவாயு கொள்கலன்களை மீண்டும் சந்தைக்கு விநியோகிக்க லிட்ரோ மற்றும் லாஃப்ஸ் எரிவாயு நிறுவனங்கள் நடவ 15

## முச்சந்தி முரளி



"அப்ப கஞ்சாவை வைச்சு வஞ்சம் தீர்க்கினம் எண்டு சனம் சந்தேகப்படுறது சரிதானோ?"

## பிணைமுறி வழக்கிலிருந்து ரவி கருணாநாயக்க விடுதலை



கொழும்பு, டிசெ. 7
மத்திய வங்கி முறிகள் மோசடி தொடர்பில் தொடரப்பட்டுள்ள வழக்கின் 22 குற்றச்சாட்டுகளில், 11 குற்றச்சாட்டுக்களிலிருந்து முன்னாள் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க 15

## நாவற்குழியில் வாள்வெட்டு

சாவகச்சேரி, டிசெ. 7
நாவற்குழி புதிய குடியேற்றத்திட்டத்தில் இரு பகுதியினருக்கிடையில் 15

## 2 குழுக்களிடையே மோதல் 10 பேர் மருத்துவமனையில்

இளவாலையில் இருவர் கைது: வாள் மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 7
இளவாலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்றிரவு இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோத 15

## கைதடி, கொடிகாமத்தில் வெடித்தன காஸ் அடுப்புகள்

கொடிகாமம், டிசெ. 7
கைதடி மற்றும் கொடிகாமம் பகுதி வீடுகளில் சமையல் எரிவாயு அடுப்புகள் வெடித்துச்சிதறியுள்ளன.

கைதடி கிழக்கில் நேற்று மதியம் எரிவாயு அடுப்பில் கறி சமைத்துக் கொண்டிருந்தபோது திடீரென்று வெடித்துச் சிதறியது. உடனே 15

## கால்வாயில் பாய்ந்தது டிப்பர் ஸ்தலத்திலேயே ஒருவர் சாவு!

வட்டக்கச்சியில் இரவு சம்பவம்



கிளிநொச்சி வட்டக்கச்சி பகுதியில், வேகக்கட்டுப் பாட்டை இழந்த டிப்பர் கால்வாயில் பாய்ந்து 15

## மருத்துவ அதிகாரிக்கு கொரோனா

வவுனியா, டிசெ. 7
வவுனியா வடக்கு சுகாதார மருத்துவ அதிகாரிக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 15

# வடக்கு வீடமைப்பில் சஜித்தும் பெயில்!

### நாடாளுமன்றில் சார்ள்ஸ் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, டிசெ. 7
தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, நல்லாட்சி அரசில் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது முறையான திட்டமிடல் இல்லாது வடக்கில் ஆரம்பித்த வீடுத் திட்டங்களால் மக்கள் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். சஜித் பிரேமதாஸவின் தவறான முடிவே எமது 15

## பிரியந்தவின் சடல எச்சம் இலங்கை வந்தடைந்தது

(விரிவு மறுபக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படைவாதத்துக்கு எதிராக இணையுங்கள்

## மக்கள் விடுதலை முன்னணி வலியுறுத்து

**கொழும்பு, டிசெ.7**

**பிரியந்த குமாரவின் கொலை அடிப்படைவாதத்துக்கு எதிராக, அனைத்து நாடுகளும் ஒன்றிணையவேண்டும்.**

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார். ஜே.வி.பியின் தலைமையகத்தில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

இவ்வாறான அடிப்படைவாதங்கள் தொடர்பாக மதத் தலைவர்கள் அவதானம் செலுத்த வேண்டும். பாகிஸ்தானில் உள்ள அனைத்து இலங்கையர்களின் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அங்குள்ள இலங்கையர்கள் நாட்டுக்கு அழைத்து வரப்பட வேண்டும். - என்றார். (எ-இ)

## காப்பீடு

## உதவிப் பணத்தை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தல்

சாவகச்சேரி, டிசெ. 7

தென்மராட்சிப் பிரதேசத்தில் பொதுசன மாதாந்த உதவிப் பணம் மற்றும் நோய்களுக்கான கொடுப்பனவு பெறுபவர்களின் டிசெம்பர் மாதத்துக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலக சமூக வேலைகள் அலகினரால் அந்தந்த அஞ்சல் அலுவலகங்களுக்கு நேற்று அனுப்பப்பட்டுள்ளன.

வருட இறுதிக் கணக்குகள் முடிவுறுத்தப்படவுள்ளதால் எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர், இந்தக் கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

## கால்நடை மருத்துவர் சங்கத்தின் 73ஆவது மாநாடு கொழும்பில்

கொழும்பு, டிசெ. 7

இலங்கை கால்நடை மருத்துவர்கள் சங்கத்தின் 73ஆவது வருடாந்த மாநாடு மற்றும் பொதுச் சபைக் கூட்டம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில், கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் இடம்பெற்றது.

நிகழ்வில், கால்நடை மருத்துவர்கள் சங்கத்தின் முன்னேற்றத்துக்காக பாடுபட்ட சிரேஷ்ட கால்நடை மருத்துவர்களான எச்.பீ.பிரேமசிறி மற்றும் ஆர்.எம்.பீ.எச். தசநாயக்க ஆகியோருக்கு விருது மற்றும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

பொதுச்சபைக் கூட்டத்தின்போது இலங்கைக் கால்நடை மருத்துவர்கள் சங்கத்தின் புதிய தலைவராக கால்நடை மருத்துவர் சுசந்த மல்லவ ஆராச்சி தெரிவு செய்யப்பட்டார்.

நிகழ்வில் கால்நடை வளங்கள், பண்ணைகள் மேம்பாடு, பால் மற்றும் முட்டை சார்ந்த கைத்தொழில்கள் இராஜாங்க அமைச்சர் டீ.பீ.ஹேரத் உள்ளிட்ட இலங்கைக் கால்நடை மருத்துவர் சங்கத்தின் மருத்துவர்கள் பலரும் கலந்து கொண்டனர். (ம-4)




## பாகிஸ்தான் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம்

கொழும்பு, டிசெ.7

கொழும்பில் உள்ள பாகிஸ்தான் தூதரகத்துக்கு முன்பாக நேற்றுத் திங்கட்கிழமை அமைதியான முறையில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பாகிஸ்தான், சியால்கோட் நகரில் இலங்கைப் பிரஜை ஒருவர் எரித்துக் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து சிங்களே ஐக்கிய கூட்டமைப்பின் ஏற்பாட்டில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்தில் தேசப்பற்றாளர்கள் அமைப்பு, மக்கள் சக்தி, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு வலையமைப்பு என்பவற்றின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக தமிழ், சிங்கள, முஸ்லிம் சமூக செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டனர். (எ-இ)

## சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், டிசெ. 7

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் வாராந்தச் சிறப்புச்சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதில் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் ஆன்மிகத்திலகம் இளம் சைவப்புலவர் க.கைலைநாதன் 'வேலை வணங்குவது நமக்கு வேலை' என்னும் விடயப்பொருளில் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றவுள்ளார். (எ-இ)





## இலங்கை வந்தடைந்தது பிரியந்த குமாரவின் உடல்

கொழும்பு, டிசெ.7

பாகிஸ்தானில் எரித்துக் கொல்லப்பட்ட பிரியந்த குமாரவின் உடல் நேற்று இலங்கையை வந்தடைந்தது. பிரியந்த குமாரவின் உடற்கூற்றுப் பரிசோதனைகள் சியால்கோட்டின் அராமா இகுபால் போதனா மருத்துவமனையில் மேற்கொள்ளப்பட்டது.

அதன்பின்னர் நோயாளர் காவு வண்டிமூலம் லாகூர் விமான நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அங்கு பஞ்சாப் சிறுபான்மை விவகார அமைச்சர் இஜாஸ் ஆலம் அகஸ்ரின், அரசு மரியாதையுடன் பிரியந்த குமாரவின் உடலை ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் விமான சேவை மூலம் இலங்கைக்கு அனுப்பி வைத்தார். (எ-இ)

## வாழைத்தோட்டக் கொலை 4 சந்தேகநபர்கள் கைது



கொழும்பு, டிசெ. 7

நபரொருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் 4 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த 4ஆம் திகதி இரவு வாழைத்தோட்டப் பகுதியில் நபர் ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடம் இருந்து, கொலைக்காகப் பயன்படுத்தப்பட்ட 4 கூரிய வாள்கள் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன், கொலை செய்வதற்காக சந்தேக நபர்கள் பயணித்த கார் இனங்காணப்பட்டுள்ளது -என்றார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கை ஆரம்பம்

## நல்லூரில் நேற்று முன்னெடுப்பு





**யாழ்ப்பாணம், டிசெ. 7**

**வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் மற்றும் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில், நல்லூர் பொதுச்சுகாதாரப் பணிமனை நடத்தும் டெங்குப் பரம்பலின் கட்டுப்பாட்டு வார ஆரம்ப நிகழ்வு நேற்று முன்னெடுக்கப்பட்டது.**

நல்லூர் பொதுச்சுகாதாரப் பணிமனையின் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் எ.சஞ்சீவன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், வீடுவீடாகச் சென்று சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பணியாளர்கள் களவிஜயத்தை மேற்கொண்டு, சுற்றுச்சூழலின் துப்புரவு, மற்றும் டெங்குப் பரம்பலுக்கு ஏதுநிலைகள் உள்ளனவா என்று ஆராய்ந்தனர்.

பல்வேறு பொதுச்சுகாதாரப் பணிமனைகளிலும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை இந்த நிகழ்வுகள் முன்னெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-27)

*வவுனியாவில்*

# நவம்பர் மாதம் மட்டும் 885 பேருக்கு கொரோனா

வவுனியா, டிசெ. 7

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் 885 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். 5 பேர் உயிரிழந்துள்ளனர் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றாளர்கள் மீண்டும் இனங்காணப்பட்டு வருகின்றனர். குறிப்பாக நவம்பர்மாதம் முதலாம் திகதியில் இருந்து 30ஆம் திகதிவரையான கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் 885 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர். 5 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

எனவே தேவையற்ற விதத்தில் வீட்டில் இருந்து வெளியில் செல்வதை இயன்றளவு தவிர்க்கும் போது, தொற்றுப் பரம்பலைக் கட்டுப்படுத்தமுடியும். இதற்கு அனைவரும் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ம-4-110)

# டிப்பருடன் விபத்து இருவர் படுகாயம்

கிளிநொச்சி, டிசெ. 7

பூநகரி வீதியிலிருந்து ஏ-9 வீதிக்குப் பயணித்த மோட்டார் சைக்கிள், டிப்பருடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்த விபத்து பரந்தன் ஊடாக பூநகரிக்குத் திரும்பும் பிரதான சந்திப்பகுதியில் நேற்று இடம்பெற்றது.

மோட்டார் சைக்கிளை விலத்த முற்பட்ட டிப்பரின் ஒருபகுதி மோட்டார் சைக்கிளைக் கொழுவி இழுத்த நிலையில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் நிலை தடுமாறி கீழே விழுந்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில், கிளிநொச்சி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். கிளிநொச்சி வட்டக்கச்சியைச் சேர்ந்த, இரண்டு இளைஞர்களே படுகாயமடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பான விசாரணையை கிளிநொச்சி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-4-113)






# "புத்திகெட்ட மனிதர் எல்லாம்" வெளியானது முன்னோட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 7

"புத்திகெட்ட மனிதர் எல்லாம்" என்ற திரைப்படத்தின் முன்னோட்டம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் கடந்த வெள்ளிக்கிழமை படக்குழுவினரால் இந்த முன்னோட்டம் வெளியிடப்பட்டது.

பிளக்போர்ட் இன்டர் நஷனல் வழங்கும் 'புத்திகெட்ட மனிதர் எல்லாம்' திரைப்படம், ராஜ் சிவராஜின் இயக்கத்தில், பூவன் மதீசனின் இசையில் உள்நாட்டுக் கலைஞர்கள் பலரின் பங்கேற்பில் உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி1-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**தொ**ண்டர் ஆசிரியர்களைப் பற்றி அண்டைக்கு பட்சி சில விசயங்கள் சொன்னதெல்லோ. அதை வாசிச்சுப்போட்டு தொண்டர் ஆசிரியர்கள் கொஞ்சப்பேர் போன்எடுத்து, பட்சியிட்ட தங்கட ஆதங்கங்களை கொட்டித்தீர்த்திச்சினம்.

"நாங்கள் ஒண்டும் கல்வித் தகுதி இல்லாத ஆக்கள் இல்லை. ஏதோ ஒரு துரதிர்ஷ்டத்தால எங்களுக்கு ஏ.எல்ல கம்பஸ் கிடைக்கேலை. ஆனாலும் நாங்கள் ஸ்கூலில படிக்கேக்க படிப்பில காட்டின கெட்டித்தனம் வீணாகக்கூடாதெண்டுதான், எங்கட பள்ளிக்கூடப் பிள்ளையளுக்கு படிப்பிக்க விடுகிறவை. கெட்டித்தனம் இல்லாத ஆக்களை தொண்டர் ஆசிரியராக படிப்பிக்க விட்டு பள்ளிக்கூடத்தின்ர பேரையும், பிள்ளையளையளின்ர படிப்பையும் கெடுக்க ஆரும் நினைப்பினமோ? அப்பிடி ஒரு சின்ன ஊக்குவிப்புத் தொகையோடு வருசக்கணக்கில படிப்பிச்சதுக்கு கிடைச்ச பரிசு தான் நிரந்தர நியமனங்கள்.

ஏதோ சிங்கள ஏரியாவில இப்பிடி நியமனங்கள் இல்லை எண்டு சொன்னியள். ஆனால் அங்க கண்டபடி எல்லாருக்கும் வேலைவாய்ப்புக் குடுக்கினம். அதால இப்பிடி படிச்சு முடிச்சிட்டு வேலையில்லாமல் இருக்கத் தேவையில்லை. அதால அங்க தொண்டர் ஆசிரியர் நியமனம் தான் இல்லையேதவிர , எல்லாருக்கும் ஏதோ ஒரு வேலை கிடைச்சுக் கொண்டிருக்கு. ஆனால் இஞ்ச அப்பிடி இல்லையே. கம்பஸில படிச்சவை கூட போராடினால் தான் வேலை கிடைக்குது.

நாங்கள் சொற்ப வேதனத்தோட படிப்பிக்கேக்க ஒருத்தர் கூட எங்களுக்காக கதைச்சது கிடையாது. ஆனால் இப்ப நிரந்தர நியமனம் கிடைச்சு ரெயினிங் கொலிஜ் போகப் போறம் எண்டவுடன ஏதோ நாங்கள் தகுதி இல்லாத ஆக்கள் மாதிரி கதைக்கிறது என்ன நியாயம்?"

எண்டு தங்கட பக்கத்தை நியாயத்தை ஒரேமூச்சில சொல்லிச்சினம்.

தொண்டர் ஆசிரியர்கள் எல்லாரும் தகுதி இல்லாத ஆக்கள் எண்டு பட்சி ஒருக்காலும் சொல்லேலை. அதில சொல்லப்பட்ட விசயம் அரசியல்வாதிகள் சிலரால், அவையின்ர வாலுகள் சிலருக்கும் இப்பிடித் தொண்டர் ஆசிரியர் நியமனம் குடுபட்டது. அவைக்குத்தான் சரியான கல்வித்தகுதி இல்லை, அதால ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகளின்ர தரம் பற்றி கேள்வி வரப்போகுது எண்டது மட்டும்தான் . அப்பிடி அரசியல்வாதிகளால தொண்டர் ஆசிரியர்கள் எண்ட பேரில நியமனம் குடுபட்ட ஆக்களின்ர அடிப்படைத் தகுதி நோட்டீஸ் ஒட்டினதும், போலிங் ஏஜெண்டா இருந்ததும் தான். ஆனால் ஒரு தொகுதி தொண்டர் ஆசிரியர்கள், உண்மையாகவே சரியான கஷ்டத்தின் மத்தியில, கொஞ்ச சம்பளத்தோட நாள்முழுக்க பள்ளிக்கூடத்துக்காக உழைச்சதுக்குத்தான் இப்பிடி ஒரு நியமனம் எண்டதும் உண்மைதான்.

ஆனால் இப்பிடி உண்மையான தொண்டர் ஆசிரியர்களுக்குநியமனம் குடுக்கேக்க அவையோட சேர்த்து சரியான கல்வித்தகுதி இல்லாத கறுப்பாடுகளுக்கும் நியமனம் குடுத்து, தொண்டர் ஆசிரியர்களுக்கான மரியாதையை ஒண்டிரண்டு அரசியல்வாதிகள் இல்லாமல் செய்துபோட்டினம். இனியாவது இப்பிடி தங்களுக்குச் சேவகம் செய்யிறவைக்கு நியமனங்களைக் குடுத்து, உண்மையாக உழைக்கிறவைக்கு அபகீர்த்தியை உண்டாக்கிற வேலையளை அரசியல்வாதிகள் கைவிடவேணும். ஆனால் உதெல்லாம் நடக்கிற கதையில்லைக் கண்டியளோ....!



- பட்சி

# முதுகெலும்புடன் செயற்பட்டு ஆளுந்தரப்பை தண்டியுங்கள்!

## *சபாநாயகரிடம் சஜித் வலியுறுத்து*



**கொழும்பு, டிசெ. 7**

**எதிரணியின் நம்பிக்கையை சபாநாயகர் இழந்துவிட்டார். ஆளுங்கட்சியின் ஆலோசனையின் பிரகாரம் செயற்படாது - முதுகெலும்புடன் நடுநிலையாகச் செயற்பட்டு, உரிய தீர்வை வழங்குமாறு வலியுறுத்துகின்றோம். அவ்வாறு இல்லாவிட்டால் சபாநாயகர் பதவிக்கு தற்போதைய சபாநாயகர் பொருத்தமற்றவராகவே இருப்பார் என்று - எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

நாடாளுமன்ற அமர்வைப் புறக்கணித்த ஐக்கிய மக்கள் சக்தியினர், நாடாளுமன்ற வளாகத்தில் ஜனநாயகத்துக்காகவும்,கருத்துச் சுதந்திரத்துக்காகவும், தமது பாதுகாப்புக்காகவும், அரச வன்முறைகளுக்கு எதிராகவும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஐக்கிய மக்கள் சக்தி எம்.பிக்களுக்கு எதிராக ஆளுங்கட்சி வன்முறையைக் கையில் எடுத்துள்ளது. எமது கட்சி உறுப்பினர் மனுஷ நாணயக்கார அச்சுறுத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். உடல் ரீதியாக அவருக்கு பாதிப்பை ஏற்படுத்துவதற்கு அமைச்சர்களும், ஆளுங்கட்சி உறுப்பினர்களும் முற்பட்டுள்ளனர்.

ஆனால், இது தொடர்பில் சபாநாயகர் மௌனம் காக்கின்றார். எமது பாதுகாப்புத் தொடர்பில் உத்தரவாதம் வழங்காமல் உள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டியது சபாநாயகரின் பொறுப்பு. அந்தப் பொறுப்பை நிறைவேற்றாதவராகவே தற்போதைய சபாநாயகர் இருக்கின்றார்.

மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்துவதற்கு ஆளுங்கட்சியில் இருந்து எதிரணிப் பக்கம் வந்த அமைச்சர்கள் உட்பட ஆளுங்கட்சியினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுத்து, தனது பொறுப்பை சபாநாயகர் நிறைவேற்றவேண்டும். சபாநாயகர் என்பவர் நடுநிலையாகச் செயற்பட வேண்டியவர். தற்போதைய சபாநாயகர் எதிரணியின் நம்பிக்கையை இழந்துவிட்டார். பெரும்பான்மைப் பலத்தைப் பயன்படுத்தி, எமது குரலை நசுக்க முற்படும் அரச வன்முறையாளர்களுக்கு அஞ்ச மாட்டோம். ஜனநாயகத்துக்காக போராடுவோம். எனவே, சபாநாயகரும் முதுகெலும்புடன் செயற்பட வேண்டும் - என்றார். (ம-4-44)

# அதிஉயர் சபையில் அடிதடி ஆராய்வதற்கு விசேட குழு!

கொழும்பு,டிசெ.7

நாடாளுமன்றத்தில் சபைக்குள்ளும், அதற்கு வெளியிலும் கடந்த வெள்ளி மற்றும் சனி ஆகிய நாள்களில் இடம்பெற்றசம்பவங்கள்தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக விசேடகுழுவொன்று அமைக்கப்பட்டு, அறிக்கை பெறப்படும் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன அறிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு கூடியபோதே சபாநாயகர் மேற்படி அறிவிப்பை வெளியிட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய நாள்களில் சபைக்குள்ளும், அதற்கு வெளியிலும் சில சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. எனவே, நாடாளுமன்றின் கௌரவத்தை காப்பதற்கு அனைத்து எம்.பிக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். நாடாளுமன்ற நிலையியற் கட்டளைச் சட்டங்கள் மற்றும் இதர சட்டங்களை மதித்துச் செயற்பட வேண்டியது பொறுப்புள்ள பிரஜைகள் என்ற அடிப்படையில் உங்கள் கடமையாகும்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் முழுமையானதொரு விசாரணை அறிக்கை பெறப்படும். இருபக்கங்களிலும்உள்ள சிரேஷ்ட உறுப்பினர்கள் அடங்கிய விசேட குழுவொன்று நாளை (இன்று) அல்லது நாளை மறுதினத்துக்குள் (நாளை) நியமிக்கப்படும். இந்த நடவடிக்கைக்கு ஒத்துழைப்புத் தாருங்கள்- என்றார். (ம - 4- 44)

# நாடாளுமன்றத்தின் அமர்வை புறக்கணித்தது சஜித் அணி!

கொழும்பு, டிசெ. 7

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று சபை அமர்வைப் புறக்கணித்தனர்.

தமது கட்சி உறுப்பினரான மனுஷ நாணயக்கார மீது தாக்குதல் நடத்துவதற்கு முற்பட்ட ஆளுங்கட்சியினர் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஜனநாயகம், கருத்து சுதந்திரம் என்பன பாதுகாக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியுமே அவர்கள் சபை அமர்வைப் புறக்கணித்திருந்தனர்.

எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதிஉயர் சபைக்குள் ஆளுந்தரப்பு அராஜகத்தைகையில் எடுத்துள்ளமை ஜனநாயக ஆட்சிக்கு அச்சுறுத்தல் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். தேசிய மக்கள்சக்தி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட எதிரணிகள் சபை அமர்வில் பங்கேற்றிருந்தன.

(ம-4-44)

# காட்சிகளைக் கண்காணித்து தீர்ப்பைச் சொல்லுங்கள்

## *ஜே.வி.பி. சபையில் வலியுறுத்து*

கொழும்பு, டிசெ. 7

குழுக்களை அமைத்து, காலங்கடத்தாமல், இந்த விடயத்தில் நீங்களே நேரடியாகத் தலையீடுசெய்து சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய தீர்ப்பை வழங்குங்கள் என்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தனவிடம், ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வேண்டுகோள் விடுத்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சபாநாயகரால் விடுக்கப்பட்ட அறிவிப்பு தொடர்பில், கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

இதற்கு முன்னரும் குழுக்கள் அமைக்கப்பட்டன. கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. ஏன்! நாடாளுமன்றில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் சி.ஐ.டி. கூட விசாரணை நடத்தியது. சி.ஐ.டி விசாரணை அறிக்கையில் எதுவும் வெளியாகவில்லை. அநாகரிகமாக நடந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, சபை அமர்வில் ஒரு வாரம் பங்கேற்க தடைவிதிக்கும் குறைந்தபட்ச தண்டனை கூட வழங்கப்படவில்லை. நியமிக்கப்பட்ட குழுக்களால் பயன் கிட்டவும் இல்லை.

நாடாளுமன்றுக்குள் பாதுகாப்பு இல்லை, தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதாகவே ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பிக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இவ்வாறானதொரு நிலையில் எவ்வாறு சபை அமர்வைக் கொண்டு செல்வது? பாதீட்டு விவாதம் 10 ஆம் திகதி நிறைவுபெறும். நாளை குழு அமைக்கப்படும் என நீங்கள் (சபாநாயகர்) குறிப்பிடுகின்றீர்கள். அந்தக் குழுவின் அறிக்கை வெளிவர இரண்டு மாதங்களாவது செல்லும். ஆனால் சபை அமர்வில் பங்கேற்க வேண்டிய தேவை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இருக்கின்றது.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் காணொளிகள் உள்ளன. எல்லா இடங்களிலும் கமராக்கள் உள்ளன. நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டால்கூட, அவருடன் தொடர்பில் இருந்தவர்கள் யார், எந்தெந்த இடத்தில் அவர் முகக்கவசம் அணியவில்லை என்பன உட்பட அனைத்து விவரங்களும் இங்கு திரட்டப்படுகின்றன.

ஆகவே, குழுக்களை அமைத்து, காலம் கடத்தாது, இந்த விடயத்தில் நீங்கள் நேரடியாகத் தலையிடுங்கள். அதற்கான பொறுப்பு உங்களுக்கு உள்ளது. நெடுநாள் தேவையில்லை, ஓரிரு மணித்தியாலங்கள்போதும். கமராக்களில் பதிவான காட்சிகளை ஆராயுங்கள். தாக்குதல் நடத்த முற்பட்டது யார் என்பது உட்பட அனைத்து தகவல்களையும் வெளியிடுங்கள். ஆளும், எதிரணி எம்.பிக்கள் அடங்கிய குழு அமைத்தால் அவர்கள் தமது கட்சி உறுப்பினர்களை பாதுகாக்க முற்படும் நிலைமையே உருவாகும். என்றார். (ம-4-44)

# திருவெம்பாவை சனியன்று ஆரம்பம்

இந்துக் கோயில்களில் எதிர்வரும் சனிக்கிழமை திருவெம்பாவை வழிபாடுகள் ஆரம்பமாகவுள்ளன. கோயில்களில் அதிகளவானவர்கள் ஒன்றுகூட தடை விதிக்கப்பட்டுள்ளதால், திருவெம்பாவை வழிபாடுகள் நடைபெறவுள்ள தென்மராட்சிப் பிரதேச கோயில்களின் நிர்வாகத்தினர், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்துடன் தொடர்புகொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# சர்வதேசத்துக்காக ஐ.ம.ச. நாடகம்

## *ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டு*

கொழும்பு, டிசெ. 7

இலங்கை நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் இல்லை, பாதுகாப்பு இல்லை என்று சர்வதேச சமூகத்துக்கு எடுத்துரைப்பதற்காகவே ஐக்கிய மக்கள் சக்தியினர் சபை அமர்வைப் புறக்கணித்துள்ளனர். இதுதான் அவர்களின் அரசியல் நிகழ்ச்சி நிரல் என்று ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். நாடாளுமன்றத்தில் நேற்று இது தொடர்பில் கருத்து வெளியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஸம்மில் மேலும் தெரிவிக்கையில்;

சபைக்குள் பாதுகாப்பு இல்லை எனக்கூறி, சபை அமர்வை புறக்கணித்துள்ள எதிரணி உறுப்பினர்கள், நாடாளுமன்ற சிற்றுண்டிச்சாலையில் உள்ளனர். இங்கு இல்லாத பாதுகாப்பு அவர்களுக்கு அங்கு எப்படி இருக்கும்? சர்வதேச சமூகத்துக்கு படம் காட்டுவதற்கும், ஊடகக் கண்காட்சிக்காகவுமே அவர்கள் இவ்வாறான செயலில் இறங்கியுள்ளனர்.

அதேபோன்று வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் விமர்சிப்பதற்கு அவர்களுக்கு ஒன்றும் இல்லை. அதனால்தான் தமது அரசியல் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள இவ்வாறு செயற்படுகின்றனர் - என்றார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட ஆளுங்கட்சி பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிக்கையில்;

இலங்கை நாடாளுமன்றில் ஜனநாயகம் இல்லை, பாதுகாப்பு இல்லை என்று சர்வதேச சமூகத்துக்கு காட்ட முற்படுகின்றனர். அடுத்ததாக சர்வதேச நாடாளுமன்றுக்கும் கடிதம் எழுதுவார்கள். இதுதான் அவர்களின் அரசியல். இன்று (நேற்று) வீடமைப்பு அமைச்சு தொடர்பில் விவாதம் நடக்கின்றது. எனவே, சஜித்தின் ஊழல்கள் அம்பலமாகிவிடும் என்பதாலும் இவ்வாறு சபை அமர்வில் பங்கேற்காமல் இருந்திருக்கலாம்- என்றார். (ம-4- 44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.டி.பி. அலுவலகம் முன்பாக அரண் மீளமைக்கப்படுவது எப்படி?

## வர்த்தகர்களும் அவ்வாறு செய்யலாமா அரச திணைக்களங்களிடம் கேள்விக்கணை

**யாழ்ப்பாணம், டிசெ. 7**

**ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் யாழ். மாவட்ட தலைமை அலுவலகமாக இயங்கிவரும் ஸ்ரீதர் தியேட்டரின் பாதுகாப்பு அரண் இரண்டாவது முறையாக மீளமைக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் பல்வேறு கேள்விகள் எழுப்பப்படுகின்றன. எந்த நடைமுறையின் கீழ் அவ்வாறு மீளக்கட்டுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது? என்று பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.**

போர்க் காலத்தில் கட்சியின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு குறித்த அரண் அமைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

போர் நிறைவடைந்து 12 வருடங்கள் கடந்துவிட்டபோதும், நாடு சுமுகமாக இருக்கும் நிலையிலும் குறித்த அரண் அகற்றப்படாமல் வீதியின் போக்குவரத்துக்கு இடையூறாகவே இருந்துவந்துள்ளது.


இந்தநிலையில், இராசாவின் தோட்ட வீதியிலிருந்து காங்கேசன்துறை பிரதான வீதிக்கு இடைப்பட்ட ஸ்ரான்லி வீதியை, வீதி அகலிப்புப் பணிக்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஒப்பந்த நிறுவனம் ஒன்றுக்கு வழங்கியிருந்தது.

வீதி அகலிப்புப் பணியின்போது தியேட்டரின் முன்பக்க பாதுகாப்பு அரண் இடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. பின்னர் காரணமின்றி மீளவும் அவசர அவசரமாக கொங்கிறீற் கற்கள் கொண்டு குறித்த நிறுவனத்தால் மீளக்கட்டிக்கொடுக்கப்பட்டது என்றும் எனினும், அண்மையில் பெய்த மழையால் அது இடிந்து வீழ்ந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், குறித்த அரண் இரண்டாவது தடவையாக கருங்கற்கள் கொண்டு பலமான முறையில் கட்டப்படுவதை அவதானிக்க முடிகிறது என்று பலரும் கூறுகின்றனர் ஸ்ரான்லி வீதியின் இருபுறமும் வாகன தரிப்பிடங்களுக்காக கடைத்தொகுதிகள், வீடுகள் என்பன வீதியின் மத்தியிலிருந்து அகலிப்பு செய்யப்பட வேண்டும் என மஞ்சள் வர்ணத்தால் அடையாளம் செய்யப்பட்ட நிலையிலும்கூட, இவை எல்லாவற்றையும் புறமொதுக்கிவிட்டு ஈ.பி.டி.பி. அலுவலகம் முன்பாக குறித்த அரண் மீள அமைக்கப்படுவது தொடர்பில் வீதி அபிவிருத்தி அதிகார சபையோ குறித்த நிறுவனமோ மௌனம் காக்கின்றது.

குறித்த அரண் போருக்கு முன்னரோ தற்போதோ கட்டப்படுவது தொடர்பில் மாநகர சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை என்பனவற்றிடம் முறையான அனுமதி பெறப்பட்டதா?

அவ்வாறில்லையெனில், வீதி அகலிப்புக்கு இடையூறாக எந்த அடிப்படையில் குறித்த அரண் மீளமைக்கப்படுகின்றது? பொதுமக்களும் வீதி அகலிப்புக்கு தமது காணிகளையும் கடைத்தொகுதிளையும் விட்டுக் கொடாது, அரச பணிகளுக்கு ஒத்துழைக்காது இருக்க முடியுமா? மக்களுக்கு ஒரு நீதி அரசியல் கட்சிகளுக்கு வேறொரு நீதியா? இந்த விடயங்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபையோ யாழ்.மாநகர சபையோ மௌனம் காப்பது ஏன் என்று பொது மக்களும் வர்த்தகர்களும் கேள்வி எழுப்புகின்றனர். (து-125)



# மின் விநியோகம் புதன் வழமைக்கு

கொழும்பு, டிசெ. 7

நாடளாவியரீதியில் மின்சார விநியோகம் நாளை முதல் வழமை போன்று இடம் பெறும் என்று இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் எம்.ஆர்.ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பிரதான மின் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாக நாடளாவிய ரீதியில் மின்சாரம் தடைப்பட்டது. சுமார் 6 மணித்தியாலங்களுக்குப் பின்னர் மின் விநியோகம் வழமைக்குக் கொண்டுவரப்பட்ட போதிலும், அமைப்பில் ஏற்பட்ட சமநிலையின்மை காரணமாக வெள்ளிக்கிழமை இரவுவரை நாட்டின் பல பகுதிகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. எனினும், சனிக்கிழமை மின்சார விநியோகம் முழுமையாக வழமைக்குத் திரும்பியது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயற்பாடுகள் வழமைக்குத் திரும்பும்வரை நாட்டின் சில பகுதிகளில் ஒரு மணித்தியால மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படலாம் என்று மின்சாரசபை அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

# திறப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ. 7

கோண்டாவில் இந்துக் கல்லூரியில் திறன் வகுப்பறை திறப்பு விழா இன்று முற்பகல் 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

கல்லூரியின் தலைவர் நடேச தயாளனின் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில், பிரதம விருந்தினராக சாந்தினி கோகுலகுமரன் கலந்து கொள்வார்.

நிகழ்வு, ஸூம்செயலி ஊடாக இடம்பெறுவதால், 575686 2654 என்ற இலக்கத்தோடு, 2021 என்ற கடவுச்சொல்லைப் பயன்படுத்தி கலந்து கொள்ளுமாறு பாடசாலைச்சமூகம் தெரிவித்துள்ளது. (ரி1)

தேர்தல்கால வாக்குறுதிகளில்

# 7 கோரிக்கைகள் முல்லையில் நிறைவேற்றப்படவில்லை

முல்லைத்தீவு, டிசெ. 7

ஜனாதிபதித் தேர்தலின்போது, முல்லைத்தீவு மாவட்டம் சார்பில் ராஜபக்சக்களிடம் முன்வைக்கப்பட்ட 13 கோரிக்கைகளில் 6 கோரிக்கைகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டுள்ளன. மிகுதி 7 கோரிக்கைகளும் நிறைவேற்றப்படவில்லை. அவற்றை விரைவில் நிறைவேற்றுமாறு அரசிடம் கோரியுள்ளோம் என்று, முல்லைத்தீவு மாவட்ட சாந்தி, சமாதானம், சமத்துவம் மற்றும் அபிவிருத்திக்கான அமைப்பின் தலைவர் அப்துல் றஹீம் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார். (து-19)

# சிறந்த சுயசிறுகதைக்கு அரச இலக்கிய விருது

யாழ்ப்பாணம், டிசெ. 7



வலி.மேற்கு, சங்கானைப் பிரதேச செயலர் பிறேமினி பொன்னம்பலம் 2020 ஆம் ஆண்டுக்கான சிறந்த சுய சிறுகதை இலக்கியத்துக்கு அரச இலக்கிய விருது பெற்றுள்ளார்.

இவர் தாட்சாயினி எனும் புனைபெயர் கொண்டு 'ஒன்பதாவது குரல்' எனும் சிறுகதை இலக்கியத்தைப் படைத்திருந்தார். அச் சிறுகதைக்காக நேற்று முன்தினம் கொழும்பில் அரச இலக்கிய விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (ச-125)

# அரிசி விலை அதிகரிக்கும்

கொழும்பு, டிசெ. 7

எதிர்வரும் புத்தாண்டுக் காலத்தின்போது உள்நாட்டு அரிசியின் விலை கிலோ 250 ரூபா வரை அதிகரிப்பதை யாராலும் தடுக்க முடியாது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் பி.ஹரிசன் தெரிவித்தார்.

மியான்மர் மாத்திரமல்ல, எந்த நாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தாலும் இந்த நிலைதான் ஏற்படும். நாட்டில் காணப்படுகின்ற டொலர் நெருக்கடிக்கு சர்வதேச நாணய நிதியத்தை அன்றி, சீனாவை நாடுவதால் தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# மக்கள் வங்கியால் ஸ்கானர் இயந்திரம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.7

இலங்கை மக்கள் வங்கியால், யாழ். போதனா மருத்துவமனைக்கு 7.5 மில்லியன் ரூபா மதிப்பிலான ஸ்கானர் இயந்திரம் நேற்றுக் கையளிக்கப்பட்டது. மக்கள் வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் குழந்தைவேலு கோடீஸ்வரனின் முயற்சியால், குறித்த இயந்திரம் மருத்துவமனைக்குக் கிடைக்கப் பெற்றுள்ளது.

மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரியும் பொது முகாமையாளருமான ரஞ்சித் கொடித்துவக்கு யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தியிடம் இயந்திரத்தை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார். நிகழ்வில் இலங்கை மக்கள் வங்கியின் பணியாளர்கள், மருத்துவர்கள், பணியாளர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ம-4.10)



# சாவகச்சேரியில் நால்வருக்கு தொற்று உறுதி

சாவகச்சேரி, டிசெ. 7

சாவகச்சேரி நகரப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர் ஒருவரின் குடும்பத்தினர் நால்வருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வர்த்தகருக்குத் திடீரெனக் காய்ச்சல் ஏற்பட்டதை அடுத்து, நேற்று முன்தினம் சாவகச்சேரி மருத்துவமனையில் குடும்பத்தினருக்கு அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் குடும்ப அங்கத்தவர்கள் நால்வருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (எ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரைப்பிட்டி மயானத்தில் மண்ணகழ்வை நிறுத்துக

வலி. தென்மேற்கு பிரதேசசபையில் தீர்மானம்

**யாழ்ப்பாணம், டிசெ. 7**
**தொல்லியல் சிறப்புமிக்க யாழ்ப்பாணம், ஆனைக்கோட்டை, கரைப்பிட்டி மயானத்தில் இடம்பெற்றுவரும், சட்டவிரோத மண் அகழ்வைத் தடுத்து நிறுத்தக்கோரியும்- அதன் வரலாற்றுத் தொன்மையைப் பாதுகாத்திட வேண்டுமெனவும் வலியுறுத்தி- வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

குறித்த ஆனைக்கோட்டை - கரைப்பிட்டி மயானத்தில் அண்மைக்காலமாக சில சமூகவிரோதிகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் மண் அகழ்வுகளால் அந்த மண்பிட்டிகளில் காணப்படும் பெருங்கற்கால யுகத்துக்குரிய தொல்பொருள் எச்சங்கள் அழிக்கப்படுவதாகவும் இதனைத் தடுத்து நிறுத்தி.அந்தப்பகுதியை ஒரு பாதுகாக்கப்பட்ட தொல்லியல் பிரதேசமாக பிரகடனப்படுத்த வேண்டு மெனவும் சபையில் பிரேரணை முன்வைக்கப்பட்டு இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
1980ஆம் ஆண்டில் ஆனைக் கோட்டைப் பகுதியில் கரைப்பிட்டி மயானத்தில் காணப்பட்ட மண்திட்டுக்களிடையே பேராசிரியர் கா.இந்திரபாலா, பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், முனைவர் பொ.இரகுபதி ஆகியோர் தலைமையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் குழாமினால் மேற்கொள்ளப்பட்ட, ஆய்வுகளின்போது இலங்கையில் மிகமிக பழமையான ஓர் அடக்கக்குழியும் பல தொல்பொருள்களும் மீட்கப்பட்டன. அடக்கக்குழிக்குள் காணப்பட்ட ஓர் எலும்புக்கூட்டின் அருகே காணப்பட்ட மட்பாண்டமொன்றிலிருந்த பொருள்களில் ஆனைக்கோட்டை முத்திரை என சிறப்புப்பெற்ற 'கோவேதன்' எனினும் பெருங்கற்கால தமிழ் பிராமிட் எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட உலோக முத்திரை கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-319)



## 100 மாணவர்களுக்கு புத்தகப்பைகள்

சாவகச்சேரி, டிசெ.7
"பொருண்மியம் நலிந்த" ,100 மாணவர்களுக்கு புத்தகப்பைகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
கொடிகாமம், ஒட்டங்கேணி சனசமூகத்தின் ஏற்பாட்டில், கனடாவில் வசிக்கும் நந்தா சிதம்பரநாதனின் நிதி ஒதுக்கீட்டில், ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியுள்ள புத்தகப்பைகள் வழங்கப்பட்டன.
கடந்த வியாழக்கிழமை ஒட்டங்கேணி சனசமூக நிலையத்தினூடாக இந்தப் புத்தகப்பைகள் வழங்கப்பட்டன. (ஒ-ரி1,159)

## வி.கழகங்கள், பாடசாலைகளுக்கு உதவித்திட்டங்கள் கையளிப்பு



முல்லைத்தீவு, டிசெ.7
முல்லைத்தீவு , புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக்கழ கங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவனின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து, உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.
முல்லைத்தீவு , புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 8 விளையாட்டுக் கழகங்களுக்கு 50ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.
அத்துடன் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட ஆனந்தபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை மற்றும் சுதந்திரபுரம் மகா வித்தியாலயம் ஆகிய இரண்டு பாடசாலைகளுக்கும் 2 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறைக்கான கணினி உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.
இந்த உதவித் திட்டங்களை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் புதுக்குடியிருப்பு பிரதேசசபை உறுப்பினர் இ.சத்தியசுதர்ஷன், நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவனின் ஒருங்கிணைப்புச் செயலாளர் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் ஆகியோர் இணைந்து கையளித்தனர். (சு-19)

## 100 மாணவர்களுக்கு உபகரணங்கள்

முல்லைத்தீவு, டிசெ.7
சர்வதேச மாற்றுத் திறனாளிகள் தினத்தை முன்னிட்டு மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகள் 100 பேருக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்ட மாற்றுத்திறனாளிகள் மாதர் அமைப்பின் ஏற்பாட்டில் புதிய வாழ்வு நிறுவனத்தின் நிதிப்பங்களிப்பில் முல்லைத்தீவு மாவட்ட சமூக சேவைத் திணைக்களத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இந்த பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.
இதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகள் 60 பேருக்கும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாற்றுத் திறனாளிகளின் பிள்ளைகள் 40 பேருக்குமாக மொத்தம் 100 பிள்ளைகளுக்குப் பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டன. (சு-19)




## 23ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 . 02 . 1953



உதிர்வு 07 . 12 . 1998

பளை வண்ணாங்கேணியை வசிப்பிடமாகக் கொண்ட

**திருமதி பரிமளம் ஜெயம் (கல்யாணி)**

என் அன்புத் தெய்வமே! அம்மா
கண்களில் நீர்கலங்கி நிற்க
ஆழ்துயர் எம்மை வதைக்க
இருபத்தி மூன்று ஆண்டுகள் ஓடி மறைந்ததம்மா
ஆனாலும் நித்தம் நித்தம் ஈரவிழிகளோடு
கலங்கித் தவிக்கின்றோம்.
அந்த நினைவினிலே தான் இன்னும் வாழ்கின்றோம்.
ஈடு இணையில்லா எங்கள் தெய்வமே
உங்கள் உருவம் மறைந்தாலும்
எத்தனை ஜென்மம் எடுத்தாலும்
உங்கள் நினைவுகள் எம்மை விட்டு நீங்காது தாயே.

உங்கள் இனிய ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!

கொட்டாஞ்சேனை,
கொழும்பு-13.

உங்கள் பிரிவால் துயருறும்
மகள்:த.சுகந்தி குடும்பம்
கணவர்: வ.ஜெயம்

(CR 5411) 1-6


## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 7
யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனத்தின் இணையத்தின் ஊடாக மனித உரிமைகள் பற்றிய சான்றிதழ் கற்கைநெறியில் கல்வி பயின்ற 100 பேருக்கு சிறப்புச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, எதிர்வரும் 10ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளதாக இணையத்தின் தலைவர் எஸ்.யுகேந்திரா அறிவித்துள்ளார்.
இணையவழி ஊடாக இடம்பெற்ற இலவச மனித உரிமைகள் கற்கை நெறியில் மலையகம், கிழக்கு மற்றும் வடமாகாண மாணவர்கள் 170க்கும் மேற்பட்டோர் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ம-27)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## நம்மிடமுள்ள அஸ்திரம் இதுவே!

தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழ் அகதிகள் கோரிக்கை விடுத்தால், அவர்களுக்கு வாக்களிக்கும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர், ஜனாதிபதி சட்டத்தரணி புஞ்சிஹேவா தெரிவித்திருக்கிறார். தமிழகத்தில் உள்ள ஈழத்தமிழர்கள் இலங்கையில் நடக்கும் தேர்தல்களில் வாக்களிக்க வாய்ப்பு அளிக்க வேண்டும் என்று தொடர்ச்சியாகக் கோரப்பட்டு வரும் நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

இலங்கையில் நடந்த உள்நாட்டுப் போரின் காரணமாக ஈழத்தமிழர்கள் உலகெங்கும் உள்ள பல நாடுகளில், புலம்பெயர்ந்து வாழ்கின்றனர். போர் தற்போது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டாலும், அவர்கள் நாடு திரும்புவதில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. இலட்சக்கணக்கான தமிழ் மக்கள் இப்போதும் புலம்பெயர் நாடுகளிலேயே இருக்கின்றனர்.

தாயகத்தில் போரின் தகிப்பைத் தாங்கமுடியாமல் இந்தியாவின் தமிழகத்துக்கும் இவ்வாறு பெரும் எண்ணிக்கையான தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து சென்றனர். அவர்கள் இப்போதும், ஈழத்தமிழ் ஏதிலிகள் என்ற பட்டத்துடன், முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழகத்துக்குப் புலம்பெயர்ந்து சென்ற ஒரு தொகையினர் இப்போது நாடு திரும்பியிருந்தாலும், அங்கு தொடர்ந்தும் ஆயிரக்கணக்கானவர்கள் தங்கியிருக்கின்றனர்.

போர் முடிந்த பின்னர், தமிழ் மக்களின் வாழ்விடங்களில் தேர்தல்கள் நடத்தப்பட ஆரம்பித்த பின்னர், தமிழ் மக்களின் புலம் பெயர்வு அதில் பெரும் தாக்கம் செலுத்துவதை மறுக்கமுடியாது. புதுப்பிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலின் அடிப்படையில் தமிழ் பிரதேசங்களுக்கான நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை கிரமமாகக் குறைந்து வருகின்றது. அதேசமயம் சிங்கள, முஸ்லிம் பிரதேசங்களில் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் ஏறுமுகமாக இருக்கின்றது. இந்த நிலைமை மிக ஆபத்தானது.

தமிழகத்துக்குப் புலம்பெயர்ந்துள்ள ஈழத் தமிழர்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கான வழியொன்றை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் சுட்டிக்காட்டியிருக்கிறார். தங்களை வாக்காளர்களாகப் பதிவு செய்யவேண்டும் என்று தமிழகத்தில் இருக்கும் எவரும் கோரிக்கை முன்வைக்கவில்லை. அவர்கள் கோரிக்கை முன்வைத்தால்தான் நடவடிக்கை எடுக்க முடியும். தேர்தல் முறைமை மறுசீரமைப்புத் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அமர்வுகள் இன்னமும் முடியவில்லை. இந்தக் கோரிக்கையை அங்கும் முன்வைக்க முடியும் என்று கூறியிருக்கிறார் அவர்.

இந்த விடயத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் அதிக கவனம் எடுக்க வேண்டும். இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தி தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர்களை ஒருங்கிணைத்து அவர்களை வாக்காளர்களாகப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும். பறிபோய்க்கொண்டிருக்கும் தமிழர் பிரதிநிதித்துவத்தை தக்கவைப்பதற்காக நம்மிடமுள்ள ஒரே அஸ்திரம் இதுதான். அவசரமும், அவசியமுமான இந்தப் பணியை காலம் தாழ்த்தாது விரைந்து முடிக்கவேண்டும்.




# கொரோனாத் தடுப்பூசி ஏற்றாதவர் நாட்டுக்குள் நுழைந்தது எவ்வாறு?

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் முறைப்பாடு

**கொழும்பு, டிசெ. 7**

**ஒமிக்ரோன் வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ள நைஜீரியப் பெண், கொரோனாத் தடுப்பூசிகள் எதனையும் செலுத்தவில்லை. அவர் எவ்வாறு நாட்டுக்குள் அனுமதிக்கப்பட்டார் - என்று கொரோனா வைரஸ் ஒழிப்புக்குழுவிடம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் முறைப்பாடு செய்துள்ளது.**

இது தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய செயற்குழு உறுப்பினர் பிரசாத் கொலம்பகே தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல்சட்டங்களுக்கு அமைவாக, தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்திக் கொள்ளாதவர்கள் நாட்டுக்குள் நுழைய முடியாது. நாட்டுக்குள் நுழைபவர்கள் தொடர்பில் சுகாதாரத் தரப்பினர், பாதுகாப்புத்தரப்பினர் அவதானம் செலுத்த வேண்டும். நாட்டுக்குள் நுழைந்த ஒருவருக்கு ஒமிக்ரோன் வைரஸ் தொற்றியிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளமை, நாட்டின் சுகாதாரத்துறைக்குப் பாரதூரமான அச்சுறுத்தலாக மாறியுள்ளது. எனவே இது தொடர்பில் அனைவரும் மிகுந்த அவதானத்துடன் செயற்படவேண்டும் - என்றார். (ம-4)

# பொறுப்புக்கூறல் இடம்பெறாதவிடத்து மனித உரிமை மீறல்கள் தொடரும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளர் சட்டத்தரணி சுகாஷ் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 7

ஈழத்திலே அரங்கேறிய இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை வாயிலாக பொறுப்புக் கூறல் மேற்கொள்ளப்படாதவிடத்து மனித உரிமை மீறல்கள் தொடரவே செய்யும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பேச்சாளரான கனகரத்தினம் சுகாஷ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

இலங்கையில் மனித உரிமைகள் என்பது வெறும் பேச்சளவிலும், எழுத்தளவிலும் மாத்திரமே, இருக்கிறதேதவிர, நடைமுறையில் மக்கள் அனுபவிக்கக்கூடியதாக இல்லை என்பது வெளிப்படை உண்மை. அதிலும் குறிப்பாக, தமிழ்த் தேசியஇனம் திட்டமிட்ட வகையில் மனித உரிமைகள்ரீதியாக ஒடுக்கப்பட்டும், அடக்கப்பட்டும், முடக்கப்பட்டும் வருவது கடந்தகாலம் சொல்லித் தந்த பாடம். நிகழ்காலத்திலும் அதுதான் தொடர்கின்றது. மிக அண்மையில் நடந்த வேதனையான விடயம் உலக நெறிமுறைகளுக்கு மாறாக, சர்வதேச சட்டங்களுக்கு முரணாக, சர்வதேச மனிதாபிமானமற்ற, மனித உரிமைப் பட்டயங்களுக்கு முரணாக, இறந்த உறவுகளை நினைவுகூருகின்ற தமிழ் மக்களினுடைய அடிப்படை உரிமை இன்றியமையாத உரிமை, மறுக்கப்பட்டிருக்கின்றது.

அதிலும், சில நீதிமன்றங்கள், நினைவேந்தலுக்கு தடை விதிக்காத சூழலில்கூட பொலிசாரும் இராணுவத்தினரும் நினைவேந்தலை தடுத்தமை அப்பட்டமான மனித உரிமை மீறல் என்பதோடு, தனது நாட்டின் நீதித்துறையை தாங்களே மதிக்கப்போவதில்லை என்பதை அதே நாட்டின் அரசும், பொலிஸாரும் வெளிப்படையாக வெளிப்படுத்தி நிற்கின்றார்கள். இது கவலையான விடயம் மாத்திரம் அல்ல. ஓர் அபாய சமிக்ஞையும் ஆகும்.

ஏனென்றால், ஒரு நாட்டினுடைய இராணுவம் அல்லது பொலிஸ் அந்த நாட்டினுடைய நீதித்துறையினுடைய, தீர்ப்புக்களையும், கட்டளைகளையும், உத்தரவுகளையும் செவிமடுக்கத் தவறுவார்களேயானால் அந்த நாட்டில் எவ்வாறு எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் வாழ முடியும் என்கின்ற ஒரு வினா எழுந்திருப்பது தவிர்க்க முடியாததாகிறது.

ஈழத்திலே அரங்கேறிய இனப்படுகொலைக்கு ஓர் சர்வதேச விசாரணை வாயிலாக பொறுப்புக்கூறல் மேற்கொள்ளப்படாதவிடத்து இத்தகைய மனித உரிமை மீறல்கள் தொடரவே செய்யும் என்பது கசப்பான உண்மையாகும் - என்றார். (ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் விலையை உயர்த்தி நிவாரணம் வழங்குங்கள்

கோருகிறது பேசாலை மீனவர் சங்கம்

**மன்னார், டிசெ. 7**

**மீன் விலையை உடனடியாக உயர்த்தி, மன்னார் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு பேசாலை மீனவர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் அரசிடம் வலியுறுத்தினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடலுணவுகளான கணவாய், நண்டு, இறால், கொடுவா, கலவா போன்ற ஏற்றுமதிக் கடலுணவுகள் வருடத்துக்கு 2 ஆயிரம் கோடி ரூபாவுக்கும் மேல் மன்னாரிலிருந்து ஏற்றுமதியாகின்றன. ஆனால், மன்னார் மீனவர்கள் பாதிக்கப்படும்போது நிவாரணம் வழங்குவதற்கு அரசு பின்னடிக்கின்றது.

கடந்த டிசெம்பரில் ஏற் பட்ட சொத்து இழப்புக்கும் நிவாரணம் இல்லை. மூன்று வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மீன் விலையை உடனடியாக உயர்த்தி, மீனவர்களுக்கான நிவாரணத்தை வழங்குங்கள் - என்றார்.

(த-213)





- குறித்த தரங்களுக்குரிய கணிதம், தமிழ், சுற்றாடல் ஆகிய பாடங்களுக்குரிய அலகுப் பயிற்சிப் பரீட்சைகள் விடைகளுடன்.
- அரச புலமைப் பரிசிலை வெற்றிக்கொள்ள உதவும் இரண்டு மாதிரி வினாத்தாள் தொகுதிகள் - விடைகளுடன்.
- பொது அறிவு- நுண்ணறிவு வினாக்கள்



2021 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான எமது இவ்வருடத்துக்கான இறுதிக் கையேடு (புலமை- 7 - 2021)

முன்னணி வளவாளர்களின் எதிர்பார்க்கை வினாக்களடங்கிய வினாத் தாள் தொகுதிகள் 5 உடன் விரைவில் வெளிவரவுள்ளது. பதிவுகளை முற்கூட்டியே மேற்கொள்ள தகவலை உங்களுக்கு தருகின்றோம்.

குறித்த வெளியீடுகளை தற்போது எமது முகவர்களிடமும் முன்னணி புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு

021 492 7411, 077 6569 617




# நாவலர் பெருமானின் நினைவு நாள் நிகழ்வு

வவுனியா, டிசெ.7

சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய ஆறுமுகநாவலரின் நினைவுநாள் நிகழ்வு வவுனியா இலுப்பையடியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் நேற்றுமுன்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

வவுனியா நகரசபை மற்றும் உள்ளூர் விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்தின் ஏற்பாட்டில், உபநகர பிதா சு.குமாரசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், நாவலரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அத்துடன், சிறப்புரையை தமிழருவி சிவகுமாரனும் தமிழ்மணி அகளங்கனும் நிகழ்த்தினர். நிகழ்வில் நகரசபை உறுப்பினர்களான க.சந்தி ரகுலசிங்கம், நா.சேனாதி ராஜா, சுமந்திரன், சு.காண்டீபன், உள்ளூர்விளைபொருள் உற்பத்தியாளர் சங்கத்தைச்சேர்ந்த நந்தன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

(ஒ-ரி1,110)



**முல்லைத்தீவில் வசிக்கும் 35 குடும்பங்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. கனடாவில் வசிக்கும் லக்ஸ்மன் ஸ்ரீ கல்யாணி தம்பதியரின் நிதியில் இந்த உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.**

வடக்கு மாகாண சபையின்முன்னாள் விவசாய அமைச்சர் க.சிவநேசனின் ஏற்பாட்டில், அவரது அலுவலகத்தில் கடந்த சனிக்கிழமை பொருள்கள் வழங்கப்பட் டன. உதவிப் பொருள்களை, சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஞா.கிஷோர், வன்னி மேம்பாட்டுப் பேரவையின் அமைப்பாளர் இ.தயாபரன் ஆகியோர் கலந்து கொண்டு வழங்கினர்.

(ஒ-ரி1,159)

# 'அன்பு சகோதரர்' இல்லத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு

மன்னார், டிசெ.7

மன்னார் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கீரி என்னும் கிராமத்திலுள்ள 'அன்பு சகோதரர்' இல்லத்தின் இருபதாவது ஆண்டு நிறைவு ஒன்றுகூடல் சூம்செயலி ஊடாக கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. 2001 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த இல்லம் கடந்த 20 வருடங்களாக செயற்பட்டு வருகின்றது.

இந்த இல்லத்தில், பெற்றோர் இருவரையும் இழந்தோர், பெற்றோர் ஒருவரை இழந்த அல்லது பெற்றோரின் வறுமையால் பராமரிக்க முடியாத நிலைமையில் உள்ள பிள்ளைகள் சிறுவர் நன்னடத்தை அலுவலகத்தால் இணைக்கப்படுகின்றனர்.

பிள்ளைகளுக்கு அடிப்படைத் தேவைகளான உணவு , உடை , உறைவிடம், கல்வி ஆகியவற்றை வழங்குவதுடன் உளவியல் ,ஆன்மிகக் காரியங்களிலும் வளர்த்து சமுதாயத்துக்கேற்ற நற் பிரஜையாக்குவதே இந்த இல்லத்தின் நோக்கமாகும்.

(ஒ-ரி1-213)






# தூண்டில் மீன்பிடியில் பிழைக்கும் குடும்பஸ்தர்!

***போரில் ஒரு காலை இழந்தும் ஏனையோருக்கு ஒரு முன்மாதிரி***

முல்லைத்தீவு, டிசெ. 7

போரில் ஒரு கால் துண்டிக்கப்பட்டபோதும், மூன்று சக்கர சைக்கிளில் சென்று தூண்டில் மீன்பிடி மூலமாக வரும் வருமானத்தில், தனது மனைவியுடன் குடும்பத்தை கொண்டு நகர்த்துகின்றார் ஒரு முதியவர்.

அவர் கல்லாறுப் பகுதியிலிருந்து சுமார் 18 கிலோ மீற்றர் தூரத்திலுள்ள கிளிநொச்சி பன்னங்கண்டி உட்பட பல்வேறு இடங்களுக்குச்சென்று தூண்டில் மூலமாக மீன்பிடித்துவருகின்றார்.

"எனக்கு 6 பிள்ளைகள் உள்ளனர். அவர்கள் திருமணம் செய்து வெவ்வேறு இடங்களில் வசித்து வருகின்றனர். போருக்கு முன்பிருந்தே கடற்றொழிலில் ஈடுபட்டுவருகின்றேன். தற்போது சிரமத்தின் மத்தியில் தூண்டில் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றேன்." என்று அவர் தெரிவித்தார்

இரண்டு கால்களும் இருந்தும் தொழிலின்றியும் வருமானமின்றியும் புலம்பித் திரிபவர்களுக்கு ஒற்றைக்கால் முதியவர் ஒரு முன்மாதிரி என்றே கூறவேண்டும்.

(த-113)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** மேலதிகாரி கொடுத்த வேலையைச் செய்து முடித்துப் பாராட்டு பெறுவீர்கள். குடும்பத்தில் சந்தோஷமான சூழ்நிலை நிலவும். பரபரப்பான நாள். உழைப்புக்கு பலன் உண்டு. இலாபகரமான ஓடர்கள் வரும்.

**இடபம்:** ஒருவருடைய வழி நடத்துதலால் வாழ்க்கையில் உயர்வீர்கள். தேவையற்ற மனஸ்தாபங்கள், வீண் பகைக்கு இடம் தரவேண்டாம். நேர்மறை எண்ணங்கள் வரும்.

**மிதுனம்:** இதுவரை இருந்து வந்த பிரச்சினை நீங்கும். மன அமைதி கூடும். பல தடைகளைத் தாண்டி முன்னேறுவீர்கள். நட்பு வட்டம் விரியும். முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.

**கடகம்:** குடும்ப உறவுகள் சுமுகமாகும். பேச்சால் பிறரை கவருவீர்கள். பணியிடத்தில் இருந்த பிரச்சினைகள் முடிவுக்குவரும். கவலையற்ற நாள். நஷ்டங்கள் குறையும். கலைத்துறையினருக்கு ஆதாயங்கள் உண்டு.

**சிம்மம்:** இழந்த மனத் தைரியம் கிடைத்துவிடும். முன்னேற்றமான நாள். குடும்ப உறவுகளின் அக்கறையும், அன்பும் உங்களை நெகிழ வைக்கும். வர வேண்டிய பணம் இன்று வரும்.

**கன்னி:** சகோதர உறவுகள் உங்களுக்கு கைகொடுக்கும். வெற்றி கூடுதலாகும். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர். குதூகலம் கூடும். இளம் வயதினருக்கு புதிய கதவுகள் திறக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்:** மன அமைதி அதிகரிக்கும். முயற்சியில் வெற்றி காண்பீர்கள். மகிழ்ச்சியான மனநிலை நிலவும். கவலைகள் முடிவுக்கு வரும். மனதில் உற்சாகம் களைகட்டும். பேச்சில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** வீண் அலைச்சலைக் குறைத்துக் கொள்ளவும். யோகமான நாள். மென்மையான அணுகுமுறையால் மற்றவர்களைக் கவர்வீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் வரும்.

**தனுசு:** வயிற்று உபாதைகள் வராதபடி உணவு விடயத்தில் கவனம் தேவை. சிலருக்கு அலைச்சல் அதிகரிக்கும். மனதில் உற்சாகம் குறையாது. எதிலும் நிதானப்போக்கு இருந்த நிலை மாறி நிம்மதி வரும்.

**மகரம்:** வருமானம் திருப்திகரமாக இருக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்களால் முன்னேற்றம் ஏற்படும். சுபச்செலவு அதிகரிக்கும். வெளிநாட்டில் இருந்து வருமானம்வரும். உறவினர் உதவி செய்வர். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கும்பம்:** பேச்சில் நிதானம் அவசியம். பணியில் பரபரப்பு இருக்கும். குடும்பத்தினருடன் இணக்கமான சூழல்மலரும். நட்புவட்டம் விரியும். குழந்தைகளால் ஏற்பட்டிருந்த மன வருத்தங்கள் தீரும். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும்.

**மீனம்:** வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்பு சிலருக்கு உருவாகும். மனக் குழப்பங்கள் நீங்கி வாழ்வில் நம்பிக்கை பிறக்கும். தேவையற்ற வாக்குறுதிகளை யாருக்கும் தர வேண்டாம். எதுவும் நிதானமாகவே நடைபெறும். மனதில் மகிழ்ச்சி மேலோங்கும்.




# விதிகளை மீறி பிக்பாஸில் பங்கேற்ற கமல்ஹாசன்
## விளக்கம் கேட்கும் அரசு



சென்னை, டிசெ.7

கொரோனா விதிமுறையை மீறி பிக்பாஸ் நிகழ்ச்சியில் நடிகர் கமல்ஹாசன் கலந்து கொண்டுள்ளார் என குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

நடிகர் கமல்ஹாசனுக்கு அண்மையில் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற நிலையில் வீடு திரும்பியிருந்தார். வீடு திரும்பி 7 நாள்கள் முடிவடைவதற் குள் கடந்த சனிக்கிழமை நடந்த பிக்பாஸ் நிகழ்ச்சியின் [illegible] கலந்து கொண்டார் என கமல் மீது குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுகுறித்து மருத்துவத்துறை செயலாளர், கொரோனா விதிமுறையை மீறியது தொடர்பாக நடிகர் கமல்ஹாசனிடம் அரசுத் தரப்பில் விளக்கம் கேட்கப்படும்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம்
## சபைநிதி வேலைத்திட்டம் 2021 – கட்டம் IV

01.தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேசசபை, சுன்னாகம் அவர்களினால் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்டவாறான வேலைகளுக்காகக் கோரப்படுகின்றது.

02.தேசியபோட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட03/2020(i)ஆம் இலக்க 11.01.2021ஆந் திகதிய,04/2016(ii)ஆம் இலக்க 08.05.2019ஆந் திகதிய மற்றும் 04/2016(iii)ஆம் இலக்க 18.02.2021ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வட மாகாணத்தை சார்ந்தவருக்கும் மற்றும் வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.

03.இல 1-10 வரையான கேள்விகளுக்கு கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும் ,அட்டவணையிற் காட்டியபடி வீதி மற்றும் கட்டடம் புனரமைப்புக்கு பொருத்தமான தரத்தில் நிர்மாண தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப் பட்டிருத்தல் வேண்டும்.

04.தேவையான தகைமைகள் ,கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.

05.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேசசபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 0212240017) இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் **07.12.2021**தொடக்கம் **20.12.2021**ஆம் திகதி வரை வேலைநாட்களில் மு.ப 9.00 மணிமுதல் 15.00 மணிவரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

06.ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் வலிகாமம் தெற்குபிரதேசசபை சுன்னாகம் எனும் இடத்திலிருந்து **07.12.2021** திகதியிலிருந்து **20.12.2021**ம் திகதிவரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.3000/- (வரிநீங்கலாக) இனை செலுத்திபெற்றுக் கொள்ளலாம். இத்தொகைபணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

07.பெறுகை ஆவணங்களினை இரு பிரதிகளில் தயாரித்து தனித்தனியாக இரு உறைகளில் இட்டு **21.12.2021**ம் திகதி மு.ப 10.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர் ,பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தெற்குபிரதேசசபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்வி நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

08.கிடைக்கப்பெற்ற கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்துச் செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

09.கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | வேலைவிபரம் ஒப்பந்தஇலக்கம் | மதிப்பீட்டுத் தொகை (Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப்பிணை செல்லுபடியாகும் காலம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | நாட்கள் | திகதி | தொகை | திகதி |
| 1 | ஆலங்கட்டை பிள்ளையார் குறுக்கு வீதி, ஐயம்பிள்ளைவைரவர்வீதி – ஏழாலை NP/14/41/15/02(05)/CF/2021/33 | 0.894 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 9,000.00 | 08.03.2022 |
| 2 | களவாவோடை அம்மன் குறுக்கு வீதி உப ஒழுங்கை, கோட்டைக்காடு குறுக்குவீதி 1ம் குறுக்கு ஒழுங்கை மற்றும் சிவன்கோவில் குறுக்கு வீதி உப ஒழுங்கை – ஏழாலை NP/14/41/15/02(05)/CF/2021/34 | 0.967 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 9,700.00 | 08.03.2022 |
| 3 | மாப்பாணர் வீதி– மயிலங்காடு, சமாதி கோவில் குறுக்கு வைரவர் வீதி–குப்பிளான் வடக்கு, அயட்டைப்புலம் குறுக்கு வீதி 2ம் ஒழுங்கை, குப்பிளான் தெற்கு NP/14/41/15/02(05)/CF/2021/35 | 1.178 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 12,000.00 | 08.03.2022 |
| 4 | மல்வம் உப வீதி 4ம் ஒழுங்கை, 5ம் ஒழுங்கை, ட்ராண்ஸ்போமர் 1ஆம் ஒழுங்கை மற்றும் சங்குவேலி அந்திரான் 7ஆம் கிளை வீதி NP/14/41/15/02(05)/CF/2021/36 | 1.953 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 20,000.00 | 08.03.2022 |
| 5 | கே.கே.எஸ் குறுக்கு வீதி, சிங்கத்தின் கலட்டி 4ம் ஒழுங்கை, சிங்கத்தின் கலட்டி 3ம் ஒழுங்கையின் உப ஒழுங்கை, கடுகநாவல் வீதி மிகுதி - இணுவில் NP/14/41/15/02(05)/CF/2021/37 | 1.258 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 13,000.00 | 08.03.2022 |
| 6 | துவாக்கை வீதி குறுக்கு ஒழுங்கை, பருத்தியோலைவீதி - கந்தரோடை NP/14/41/15/02(05)/CF/2021/38 | 0.979 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 10,000.00 | 08.03.2022 |
| 7 | நாகம்மாள் வீதி NP/14/41/15/02(05)/CF/2021/39 | 0.701 | 60 நாட்கள் | C9& C8 வீதிப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 7,500.00 | 08.03.2022 |
| 8 | சுன்னாகம் நூலகத் திருத்தம் NP/14/41/15/02(05)/CF/2021/40 | 1.265 | 60 நாட்கள் | C9& C8 கட்டடப் புனரமைப்பு | 49 நாட்கள் | 08.02.2022 | 7,500.00 | 08.03.2022 |
| 9 | தாவடி மயான உப ஒழுங்கை மற்றும் கே.கே.ஸ் வீதியின் உப ஒழுங்கை, தாவடி மானிப்பாய் 1ம் வீதி NP/14/41/15/02(05)/CF/2021/41 | 2.026 | 90 நாட்கள் | C8& C7 வீதிப் புனரமைப்பு | 63 நாட்கள் | 22.02.2022 | 20,500.00 | 22.03.2022 |
| 10 | சுன்னாகம் உப அலுவலகம், மீன் சந்தை, மரக்கறிச்சந்தை மலசலகூடத் திருத்தம் NP/14/41/15/02(05)/CF/2021/42 | 2.294 | 90 நாட்கள் | C8& C7 கட்டடப் புனரமைப்பு | 63 நாட்கள் | 22.02.2022 | 23,000.00 | 22.03.2022 |

10. கேள்வி தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்குபிரதேசசபை தலைமை அலுவலகத்தில் 14.12.2021ம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

க.தர்ஷன்,
தவிசாளர்,பெறுகைக்குழு,
வலிகாமம் தெற்குபிரதேசசபை,சுன்னாகம்.
07.12.2021

(CR 5706)1-6

## இலவச மருத்துவ முகாம்

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் வழிகாட்டலில் கிளிநொச்சி- அக்கராயன் ஆரோக்கியமாதா ஆலயத்தில் இலவச மருத்துவ முகாம் நிகழ்வு இடம்பெற்றது.

கொரோனா பெருந்தொற்று காரணமாக தூரஇடங்களில் இருந்து பொதுமருத்துவமனைக்குச் சென்று சிகிச்சைபெற முடியாதவர்களும் பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள் என பலர் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். (ய-213)

## கண்ணீர் அஞ்சலி

அமரர்
**பரமசிவம்பிள்ளை ஜெயசௌந்தரா**
மலர்வு : 07.06.1953 உதிர்வு :06.12.2021



அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயரில்
நண்பர்கள்-இணுவில்

(CS 788) 1-6

## கண்ணீர் அஞ்சலி



எமது வித்தியாலயத்தின் ஆசிரியை
**திருமதி சைலஜா அமிர்தன்**
அவர்களின் பாசமிகு தந்தை
**சொக்கலிங்கம் சண்முகலிங்கம்**
அவர்கள் நேற்று முன்தினம் (05.12.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை சமூகம்
யா/கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம்.

(cr.36153) (2.6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் **திரு.செ.அமல்ராஜ்** அவர்களின் பாசமிகு தந்தையார்
**அமரர் கந்தையா செல்வராஜா**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
பிரதேச செயலகம்,
ஊர்காவற்றுறை.

(CS 782) (3/6)

## பூவுலகைத் துறந்து ஈராண்டு நிறைந்ததுவோ?



உதயம் 23.10.1993 மறைவு 29.11.2019
**செல்வி மகேந்திரன் கோபினா**
திதி: வளர்பிறை சதுர்த்தி
(07.12.2021)

**பூ உதிர்ந்ததுவோ?**
புன்னகையின் பூவே!
பூக்காமல் ஏனுதிர்ந்தாய்!
பொன்னனையாள் உனையிழந்து
திசையெங்கும் தேடுகின்றோம்
நிலையில்லா வாழ்வென்றோ
சிலையாகி நீதுயின்றாய்!
விழியோடு நீர்சுமக்கும் சுமை தந்தாய்!
என்செய்வோம்?

**விண்ணிலிருந்து வாழ்த்துடன் ஓர் கடிதம்!**
மண்ணிலே விழுந்த விதை
விண்ணிலே வாழ்கிறது!
பாலூட்டி நீர் வார்த்து
வளர்த்த உயிர் வாழ்கிறது
உங்கள் அன்பு கோபினா
விண்ணுலகில் தேவதையாய்!
நீங்களெல்லாம் நலம் வாழ
நாளுமே வாழ்த்துரைப்பேன்.

அன்புடன் கோபினா
077 521 3022

(CS 1117)1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்ஜெட்டை நிறைவேற்றாமல் நிதியைச் செலவிட முடியாது

## உள்ளூராட்சி சபைகளுக்கு அறிவுறுத்து

**கொழும்பு, டிசெ.7**

**உள்ளூராட்சி மன்றங்களின் வரவு - செலவுத்திட்டம் நிறைவேற்றப்படாமல், அடுத்த வருடத்துக்கான நிதியைச் செலவு செய்ய முடியாது -என்று நாடாளுமன்றத்தில் நடைபெற்ற அரச சேவைகள், மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அலுவல்கள் பற்றிய அமைச்சு சார் ஆலோசனைக்குழுவில் சுட்டிக்காட்டப்பட்டது.**

இது தொடர்பான அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;- அம்பலாங்கொட நகரசபை 2021 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத்திட்டத்தை நிறைவேற்றாமல், நிதியைச் செலவிட்டிருப்பது தெரியவந்துள்ளது.

இது சட்டத்துக்கு முரணானது என்று உள்ளூராட்சி ஆணையாளரால் ஆளுநருக்குத் தெரியப்படுத்தப்பட்ட பின்னர், உள்ளூராட்சி மன்றத்தைக் கலைப்பதற்கான வாய்ப்பு உள்ளது என்று தெரியவந்தது.

இதுபோன்ற நிலைமை மேலும் சில உள்ளூராட்சி மன்றங்களிலும் காணப்படுகின்றது என்று வருகை தந்திருந்த உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

இது தவறான எடுத்துக்காட்டு. இது தொடர் பில் விசேட கவனம் செலுத்தி, நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற விடயங்கள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு உள்ளூராட்சி ஆணையாளர்கள் மற்றும் ஆளுநர்கள் உள்ளிட்ட பொறுப்புக்கூறவேண்டிய அதிகாரிகளை இந்தக் குழு முன்னிலையில் அழைப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம் என்றும் தெரிவித்தார். உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களின் திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கான காலத்தை நீடிக்க வேண்டிய அவசியம் குறித்து உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர்.

சிமெந்துத் தட்டுப்பாடு, தற்பொழுது காணப்படும் கொரோனாச் சூழல் போன்ற காரணங்களால் உரிய திட்டங்களை வரையறுக்கப்பட்ட காலத்துக்குள் பூர்த்தி செய்ய முடியாது போனமையால், அடுத்தவருடம் ஜனவரி மாதம்வரை அல்லது இதனைவிட அதிக காலத்தை வழங்குமாறு இங்கு கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் விரைவில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்குமாறும் அமைச்சர் தெரிவித்தார். (ஒ-4)



# வலி.மேற்குப் பிரதேசசபையில் மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு

**யாழ்ப்பாணம், டிசெ.7**

வலி.மேற்குப் பிரதேசசபை மண்டபத்தில் 'புலர் தொண்டு' நிறுவனத்தின் ஏற்பாட்டில், சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம் கடந்த வெள்ளிக்கிழமை கொண்டாடப்பட்டது.

நிகழ்வுக்கு, யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி வருகை தந்து, விசேட தேவையுடையவர்களோடு கலந்துரையாடியதுடன் புலர் அமைப்புக்கு 10 ஆயிரம் ரூபாவை அன்பளிப்புச் செய்தார். அத்துடன், புலர் அமைப்பின் உள்நாட்டு, வெளிநாட்டு நிதி வழங்குநர்களின் உதவியில் விசேட தேவையுடையவர்களுக்கு நுளம்புவலை, போர்வை மற்றும் துவாய் ஆகியவை வழங்கப்பட்டன. நிகழ்வில், மருத்துவ நிபுணர்களான எம்.தவராசா, சிவபாதமூர்த்தி ஆகியோரும் கலந்துகொண்டு, விசேட தேவையுடையவர்களுக்கான மருத்துவ ஆலோசனைகளை வழங்கியதுடன் அவர்களுக்கான விசேட மருத்துவ முகாம்களை எதிர்வரும் நாள்களில் நடத்துவதாகவும் உறுதியளித்தனர். (ஒ-ரி1-319)

# புதுக்குடியிருப்பு பிரதேசசபை
# பொது அறிவித்தல் - 2022

1. **படவரைஞராக பதிவு செய்தல்.**
   1.1. 2022 ஆம் ஆண்டு படவரைஞராக பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2021 ஆம் ஆண்டு டிசம்பர் 28 ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளைச் செய்து கொள்வதற்கும், புதுப்பித்து கொள்வதற்கும், எமது தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.
2. **வியாபார உரிம அனுமதிப்பத்திரம் - 2022**
   2.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 149,150,151 ஆம் உப பிரிவுக்கு அமைவாக இப் பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர், பொருள்களை விநியோகிப்போர் 2022ஆம் ஆண்டிற்கான அனுமதிப்பத்திரத்தைப் பெறுவதற்கான விண்ணப்பப்பத்திரத்தைத் தமது பிரிவுக்குட்பட்ட உப அலுவலகங்களில் பெற்று அதனை பூரணப்படுத்தி புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், ஒலுமடு உப அலுவலகங்களில் சமர்ப்பிக்குமாறும் உரியகட்டணங்களை 2022.03.31 ஆம் திகதிக்குள் மீளச் செலுத்தி உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறும் கேட்டுகொள்கின்றேன்.
3. **வீடமைப்பு நகரசீர்திருத்தம் கட்டளைச்சட்டம் பிரிவு 268 இன் பிரகாரமான அறிவித்தல்**
   3.1. புதுக்குடியிருப்பு பிரதேசபையின் அனுமதியின்றி சபை எல்லைக்குள் அரச, தனியார், அரசசார்பு கட்டடங்கள், மதில், மலசலகூடங்கள், கிணறுகள், குழாய்க்கிணறுகள் என்பவற்றை அமைத்தல் புதுப்பித்தல் வேலைகளை அனுமதி இன்றி செய்தல் போன்றன சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமென்பதை அறியத்தருகின்றேன்.
   3.2. ஏற்கனவே அனுமதி பெற்றவர்கள் கட்டடம் கட்டிமுடிக்கபடாத பட்சத்தில் புதுப்பித்தல் வேண்டும்.
   3.3. சபையின் அனுமதிபெற்றுக் கட்டடம் கட்டி முடித்தவர்கள் கட்டி முடிக்கப்பட்டமை தொடர்பாக அலுவலகத்திற்கு அறியத்தந்து உரிய அமைவுச்சான்றிதழைப் (COC) பெற்றுக் கொள்ளவேண்டும்.
   3.4. அனுமதியின்றி கட்டடம் கட்டுவோர் மீது, புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் 2022ஆம் ஆண்டு வர்த்தமானி பிரசுரத்திற்கமைவாக தண்டப்பணம் அறவிடப்படும்.
4. **சூழல் பாதுகாப்பு உரிமம் (EPL) - 2022**
   4.1. மத்திய சுற்றாடல் அதிகாரசபைத் தலைவர் 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் பாதுகாப்புச்சட்டத்தின் 26 ஆம் பிரிவின் கீழ் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, எமக்கு வழங்கப்பட்ட குறிக்கப்பட்ட அதிகாரங்களின் கீழ், புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் நிர்வாகப் பாதுகாப்பு பிரதேசத்தில் 1533/16 ஆம் இலக்க, 2008.01.25 ஆம் திகதிய மற்றும் 1534/18 இலக்க 2008.02.01 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானிப் பத்திரிகைகளில் விதந்துரைக்கபட்ட தொழில் நடவடிக்கைகளுக்கு அமைவாக, மேற்குறிப்பிட்ட அறிவித்தலுக்கு இணங்க வியாபாரத்தை தொழிலை நடத்துகின்ற உரிமையாளர்களுக்கு சூழல் பாதுகாப்பு உரிமம் வழங்க வேண்டிய பொறுப்பு எமக்கு வழங்கபட்டுள்ளது. ஆகவே சம்பந்தப்பட்டவர்கள் புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமைப் பணிமனையுடன் தொடர்பு கொண்டு சூழல் பாதுகாப்பு உரிமத்தைப் பெற உரிய நடவடிக்கை எடுக்கவும். இவ்வாறு உரிமம் பெறாத எவரும் 2022 ஆம் ஆண்டு மேற்குறிப்பிட்ட தொழில்களை நடத்த அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதனையும் இத்தால் அறியத் தருகின்றோம்.
5. **விளம்பரங்களை அமைத்தல் / காட்சிப்படுத்தல்**
   5.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122(1) பிரிவிற்கு அமைவான துணைவிதியின் பிரகாரம் இப் பிரதேசசபையின் நிர்வாகப் பிரிவிலுள்ள பொது வீதிகளின் இரு மருங்கிலும் அத்துடன் வர்த்தக நிலையங்களின் முகப்புக்களிலும் பொருத்தப்பட்டு காட்சிப்படுத்தப்படும் விளம்பரங்களுக்கு 31.03.2022 ஆம் திகதிக்கு முன் உரிய கட்டணத்தைச் செலுத்தி சபையின் அனுமதியைப் பெற்றுகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் விளம்பரங்கள் இல்லாத பெயர்ப்பலகை ஒன்று மட்டும் காட்சிப்படுத்த முடியும். விளம்பரங்களுடானான பெயர்ப்பலகை மற்றும் மேலதிகமாக உள்ள விளம்பரப்பலகைகளுக்குப் பிரதேசசபையின் முன் அனுமதி பெறப்படல் வேண்டும். அவ்வாறு அனுமதி பெறப்படாத விளம்பரப்பலகைகள் பிரதேசசபையால் முன்னறிவித்தலின்றி அகற்றப்படும்.
6. **பொதுச்சந்தைகள், இறைச்சிக்கடைகள் அண்மித்த பகுதியில் கடலுணவுகள், மரக்கறிகள், இறைச்சி வகைகள் விற்பனையைத் தடைசெய்தல்.**
   6.1. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் பொதுச்சந்தைகள், இறைச்சிகடைகள் அமைந்துள்ள பகுதிகளில் 1கி.மீ வரையான சுற்றாடலில் மரக்கறிகள் கடலுணவுகள், இறைச்சி வகைகள் என்பன வர்த்தக நிலையங்களிலோ, வீதியோரங்களிலோ விற்பனை செய்தல் முற்றாகத் தடைசெய்யபட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது சபையால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை அறியதருகின்றோம்.
7. **பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்**
   7.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கழிவுப் பொருள்களை அனுமதியின்றிக் கொண்டுசெல்லல், கொட்டுதல் ஆகியன பொதுசுகாதாரத்தைக் கருத்திற் கொண்டு தடை செய்யபட்டுள்ளது. தவறின் பிரதேசசபை சட்டம் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் சட்டம் போன்றவற்றின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
   7.2. சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும், வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுப்பொருள்களைப் போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் தங்களிடம் சேரும் கழிவுப்பொருட்களைக் கொள்கலனில் சேகரித்து அதனை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரியகட்டணத்தைச் செலுத்தி சுற்றாடல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.
8. **பொதுசுகாதாரம் பேணுதல்.**
   8.1. 1987 ஆம் ஆண்டின் 15ம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 153 ஆம் பிரிவிற்கு அமைவாக சபை எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப்படாமலும், பற்றைகள் வளர்ந்தும் பொது சுகாதாரத்திற்கு இடையூறாக உள்ள காணி உரிமையாளர்கள் பற்றைகளைத் துப்புரவு செய்து சுகாதாரத்தினைப் பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.
9. **கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல்**
   9.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 66(1) ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் பொதுப்போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படும் வகையில் வீதிகளில் அலைந்து திரியும் கட்டாக்காலிக் கால்நடைகளை கட்டுப்படுத்தி உரிமையாளர்கள் சரியான முறையில் பராமரித்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் பிரதான வீதியை உள்ளடக்கிய நகர்ப்பகுதிகளில் பகல், இரவு நேரங்களிலும் ஏனைய வீதிகளில் இரவு நேரத்திலும் நடமாடும் கட்டாக்காலி கால்நடைகள் பிரதேசசபையால் பிடிக்கப்பட்டு பிடிகூலி, தண்டப்பணம் அறவிடப்படும் என்பதுடன் செலுத்தத் தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படுவதுடன் உரிமையாளருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும்.
10. **சபை எல்லைக்குள்.**
    10.1. 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 68ஆம் பிரிவுக்கு அமைவாக சபை எல்லைக்குள் கல், ஆற்றுமணல், கிரவல் என்பவற்றுக்கான வழிஅனுமதி குறித்த உப அலுவலங்களில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.
    10.2. சபை எல்லைக்குள் வாகனங்கள் நிறுத்தப்படுவதற்கான தரிப்பிட அனுமதி குறித்த உபஅலுவலகங்களில் பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.
11. **சடலங்களை தகனம் செய்தல்.**
    சுடுகாடுகள் இடுகாடுகள் சட்டத்திற்கமைய புதுக்குடியிருப்பு இந்து மயானத்தில் சடலம் தகனம் செய்வதற்காக பிரதேசசபையின் 2022 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைய பிரதேசசபையின் அனுமதி பெற்று மயானக்கட்டணம் செலுத்தியே தகனம் செய்தல் வேண்டும்.
12. **காணிகளை பராமரித்தல்.**
    சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடியிருப்புக்களுக்கு அண்டிய காணிகள் துப்புரவு செய்யாது பராமரிப்பற்று பற்றைக்காடுகளாக காணப்படின் அவற்றினை உரியவர்கள் துப்புரவு செய்தல் வேண்டும். மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**அ.தவக்குமாரன்,**
**தவிசாளர்,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**

2021.12.07



கிளிநொச்சி- முக்கொம்பன் மகா வித்தியாலயத்தில 'ஜெய்க்கா' திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்புவிழா பாடசாலை அதிபர் த.பிரபாகரன் தலைமையில் இடம்பெற்றது. (ய-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அவசர பணத்தேவையா? அல்லது அடகு வைத்த நகைகள் அறுதியாக போகின்றனவா?

எந்தவொரு வங்கியில் அடகு வைத்த நகைகளுக்கு

**பவுண் ஒன்றுக்கு ரூபா.23,000/= இற்கு மேல்**

**70 சத அதி குறைந்த வட்டியில் பெற்றுக்கொள்ளுங்கள்**

உங்கள் தற்போதைய அடகுச்சீட்டினை எமக்கு 0767 888 222 இலக்கத்திற்கு WhatsApp செய்யவும்

ஏராளமான விசேட சலுகைகள்

| | | | |
|---|---|---|---|
| செங்கலடி | 076 6227250 | மட்டக்களப்பு | 076 6227243 |
| சுன்னாகம் | 071 0870689 | ஹட்டன் | 077 8790372 |
| கிளிநொச்சி | 076 6226964 | யாழ்ப்பாணம் | 076 6226942 |
| பருத்தித்துறை | 076 6226980 | முல்லைத்தீவு | 077 1201856 |
| சாவகச்சேரி | 076 6226967 | சம்மாந்துறை | 077 8032233 |
| தலவாக்கலை | 071 0871009 | அக்கறைப்பற்று | 077 7783673 |
| நாவலப்பிட்டி | 071 0870706 | நெல்லியடி | 074 0920357 |
| புதுக்குடியிருப்பு | 076 9914642 | சங்கானை | 074 0920317 |
| கல்முனை | 071 0870663 | பேருவளை | 077 2999934 |
| பூண்டுலோயா | 077 7683889 | மத்துகம | 077 2206413 |
| வாழைச்சேனை | 077 8151938 | ஒட்டுச்சுட்டான் | 074 0929571 |
| ராகலை | 071 0870703 | வவுனியா | 074 0920313 |
| கொழும்பு | 070 2539382 | திகன | 077 8156738 |
| கம்பளை | 071 0870735 | களுத்துறை | 077 6167149 |
| மாத்தளை | 070 2539389 | வெள்ளவத்தை | 071 0870686 |
| கிண்ணியா | 077 1201853 | களுவாஞ்சிகுடி | 077 1201864 |
| மஹியங்கனை | 077 1201862 | உடப்புவ | 077 1201851 |
| கல்பிட்டி | 076 1605803 | வேலணை | 076 9940273 |
| மஸ்கெலியா | 076 0909822 | | |

(ACO 17845)


*சீரற்ற காலநிலையால்*

## பயிரழிவு ஏற்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கும் பதிவுகள்

சாவகச்சேரி, டிசெ.7

வெள்ளத்தால் பயிரழிவு ஏற்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கான பதிவுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சிப் பிரதேசத்தில் கமநல சேவைகள் நிலையத்தில் இந்தப் பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன. பயிரழிவு ஏற்பட்ட விவசாயிகள் தமது பிரிவு அபிவிருத்தி அலுவலரின் பரிந்துரையுடன் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1-9)

## முல்லை பஸ் நிலையத்தின் இறுதிப் பணிக்கு அடிக்கல்

முல்லைத்தீவு பஸ் நிலைய இறுதிக்கட்டப் பணிகளுக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நடைபெற்றது என கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தவிசாளர் க.விஜிந்தன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பஸ் நிலைய வேலைகள் நிறைவுபெறாது காணப்பட்ட நிலையில், வேலைத்திட்டத்தை முழுமையாக நிறைவுசெய்யும்முகமாக இந்த அடிக்கல் நடப்பட்டுள்ளது.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண பிரதம செயலாளர், முல்லைத்தீவு மேலதிக மாவட்டச் செயலர், கரைதுறைப்பற்றுப் பிரதேச செயலர், நகர அபிவிருத்தி சபையின் பணிப்பாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபையின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர் எனவும் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார். (ச-13)

## வலிகாமம் தென்மேற்குபிரதேச சபை, மானிப்பாய். கடைகள் வாடகைக்கு வழங்குதல் - 2021

மானிப்பாய் புளியடிச் சந்தைகடைத்தொகுதியில் சபையால் அமைக்கப்பட்ட கடை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறு வாடகைக்கு வழங்குவதற்கான ஆகக்கூடிய ஒரேமுறையில் செலுத்தக் கூடிய ஒருங்கிணைக்கப்பட்ட தொகைக்கான கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட நிபந்தனைக்கமைய வலிகாமம் தென்மேற்குபிரதேசசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கும் காலப்பகுதி: 2021.12.07. முதல் 2021.12.20 வரை பிற்பகல் 2.00 மணிவரை அலுவலக நாட்களில்

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி : 2021.12.21: பி.ப 2.00 மணிவரை

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 2021.12.21: பி.ப 2.30மணி

கேள்விப்பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம்

**நிபந்தனைகள்:-**

1) விண்ணப்பதாரர் இலங்கைப்பிரஜையாக இருத்தல் வேண்டும். அத்துடன் வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுககு முன்னுரிமை வழங்கப்படும்
2) கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் கோரிக்கைக்கடிதத்துடன் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தேசியஅடையாளஅட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமுகமளிக்க வேண்டும். அத்துடன் கிராம அலுவலரால் வழங்கப்பட்டு, பிரதேசசெயலரால் மேலொப்பமிடப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
3) கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் மூலப்பிரதி, இணைப்பிரதி ஆகிய 2ஐயும் பூரணப்படுத்தி கடித உறையிலிட்டு "தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபை, மானிப்பாய்" என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின்பெயரை தெளிவாக குறிப்பிட்டு மூலப்பிரதி, இணைப்பிரதி எனக்குறிப்பிட்டு பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்படடுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்பட வேண்டும்.
4) மாதாந்தக்கடை வாடகையாக பிரதேசசபையால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் தொகையை செலுத்தவேண்டும் என்பதுடன் குறித்த மாத வாடகைப்பணத்தை ஒவ்வொரு மாதம் 31 ஆம் திகதிக்கு முன்வரும் வேலை நாளில் செலுத்திப்பற்றுச் சீட்டைப் பெற வேண்டும் தவறுமிடத்து அதற்கான மாதக்கட்டணத்துடன் மாத வாடகைக்குரிய தண்டப்பணம் 10% மேலதிகமாக அறவிடப்படும்.
5) .கேள்விச்சித்திகாரராக தெரிவுசெய்யப்படுவோர் கேள்வித்தொகையை பிரதேதசபையால் குறிப்பிடப்படும் திகதிக்கு முன்னர் முழுமையாகச் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொண்டு பிரதேசசபையுடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
6) சித்திகர குத்தகைக்காரர் வலிகாமம் தென் மேற்குப் பிரதேசசபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.
7) சித்திகர குத்தகைக்காரர் பாதுகாப்பு வைப்புப்பணமாக 03 மாத வாடகைத் தொகையினை முற்பணமாகச் செலுத்த வேண்டும்.
8) சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார உரிமக்கட்டணத்தை வருடாந்தம் செலுத்தி வியாபார உரிமச் சான்றிதழையும் பெற்றுக்கொள்ள வேண்டும்.
9) கேள்விப்பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கம் அதிகாரம் பெறுகைக்குழுவிற்கு உண்டு..
10) மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மெற்குபிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் கடமை நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம் தொடர்புகளுக்கு 0212255381 / 0212256646

| இல | சந்தைக் கடையின் விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மாதாந்த வாடகை |
|---|---|---|---|---|---|
| | [illegible] உப அலுவலகம் | | | | |
| | [illegible] | 1,000.00 | 3600.00 | 360,000.00 | 1200.00 |

[illegible]
[illegible] தென்மேற்கு பிரதேச சபை.
2021.12.07
(CR 5736) 1-6

## பூஸ்டர் தடுப்பூசிக்கு முதியவர்கள் வரிசை



சாவகச்சேரி, டிசெ.7

60 வயதுக்கு மேற்பட்டோருக்கு, சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டது. அதில் ஐந்நூறுக்கும் மேற்பட்டவர்கள் வரிசையில் காத்திருந்து தடுப்பூசி பெற்றனர். இந்தவாரம் பிரதேசத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டது. ஏற்கனவே சினோபார்ம் தடுப்பூசியை இரண்டு கட்டமாக பெற்றவர்களில், மூன்று மாதங்கள் கடந்தவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி ஏற்றப்பட்டது. (ஒ-4-9)

*பண்டிகைக் காலத்தில்*

## தே.எண்ணெய்க்கு கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, டிசெ. 7

எதிர்வரும் பண்டிகைக் காலத்துக்காக தேங்காய்எண்ணெய் கட்டுப்பாட்டு விலையின்கீழ் சந்தைக்கு விநியோகிக்கப்படும் என்று அகில இலங்கை பாரம்பரிய தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



ஒரு போத்தல் 400 ரூபா தொடக்கம் 450 ரூபா வரை விலை நிர்ணயிக்கப்படலாம் என்று அந்தச் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 34 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



குருமாமணி அமரர்
**வே.த.தணிகாசலம்**
(முன்னாள் அதிபர் -
யா/ அல்வாய் ஸ்ரீலங்கா
வித்தியாசாலை)

ஆசிரியத்துவத்தின்
- அணிகலானாக
அதிபராக அறிவுரைகள்
- பல புகட்டி
சத்தியத்தின் வழிநின்று
சான்றோராக எமை
- வளர்த்தெடுத்து
சாதனைகள் பல படைத்து
சாலவும் பல கற்றுத் தேர்ந்து
குன்றாக சிகரம் என
- உயர்ந்து நின்று
குத்து விளக்காக என்றும்
சுடர்விட்டுடெரிவீர்கள்.

ஜனனம் 12.09.1928
மரணம் 07.12.1987

"இராஸ்தலம்"
அல்வாய்.
076 365 6508

என்றும் தங்களை நினைவுகூரும்
மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(NE 17822) (3/6)

## இரண்டாம் ஆண்டு நினைவுநாள்



பிறப்பு 08.10.1942
இறப்பு 18.12.2019

**செல்லர் செல்லத்துரை**
திதி: 07.12.2021

பண்பும் பாசமும் அறிவும் ஊட்டி
தரணியில் எம்மை உயர்த்தியவரே
பாரினிலே சிறப்புடனே வாழ - எமக்கு
வழிகாட்டியாக இருந்தீர்களே!
கள்ளமற்ற மனமும் களங்கமற்ற அன்பும்,
உதட்டோரம் உதிக்கும் உங்கள் புன்னகையும்
காணாது வாடி நிற்கின்றோம்
ஆண்டுகள் இரண்டானாலும் ஆறவில்லை எம் துயரம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! ஓம்சாந்தி!! ஓம் சாந்தி!!!

கீரிமலை வீதி,
சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.
குடும்பத்தினர்
(CS 774) (3/6)

## மரண அறிவித்தல்



**சரவணமுத்து லோகேஸ்வரன்**
(முன்னாள் மின்சார சபை ஊழியர்)

கோண்டாவிலை பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கினை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து லோகேஸ்வரன் (முன்னாள் மின்சார சபை ஊழியர்) அவர்கள் நேற்று (06.12.2021) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் சந்திரகலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்துரை வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், அன்னபூரணம், பரமேஸ்வரன் (சுவிஸ்), சர்வேஸ்வரன் (சுவிஸ்), பரிபூரணம் (லண்டன்), தங்கேஸ்வரன் (லண்டன்), பகீஸ்வரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற கனகரத்தினம், சந்திரசேனா, இராசரத்தினம், சந்திரலேகா மற்றும் இராஜரட்ணம், செல்வநாயகம், பஞ்சரத்தினம், சற்குணவதி, தங்கராசா, கேசவராணி, புனிதவதி, நடராசா, வினோஜிகா, கமலினி ஆகியோரின் மைத்துனரும், பிரியங்கா, பிரிந்தா, தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், தமிழ்மாறன் (இத்தாலி), முகுந்தன் (ஆசிரியர், பரியோவான் கல்லூரி) ஆகியோரின் மாமனாரும், தமிழ்பிரியன், தமிழ்வாணன், மனோவா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவில் கொட்டைக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS783) (3/6)
தகவல்: குடும்பத்தினர்

## கனத்த இதயத்துடன்



**மார்க்கண்டு இராமதாசன்**

யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தின் தலைவராகவும் இலங்கை பொறியியலாளர் சங்க வடமாகாண பிரிவின் அங்கத்தவராகவும் இருந்து யாழ். மாவட்டத்தில் நிர்மாணத் துறையின் உயர்தரத்திலான (C1) சான்றிதழ் பெற்ற Euroville நிறுவனத்தை வழி நடத்தி நிர்மாணத்துறையின் உயர்விற்கு அரும்பணியாற்றிய அன்னாரின் இழப்பினால் கவலையுற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவன் தாள் பணிகின்றோம்.

**ரூலின்ஸ் பிறைவேட் லிமிட்டெட்**
**பணிப்பாளர் சபையும், ஊழியர்களும்.**
(CS 778) (2.6)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 29 . 11 . 1947
மறைவு 22 . 11 . 2017

அமரர் திருமதி
**கிருஷ்ணசுவாமி தவமலர்**
திதி: பூர்வபக்க சதுர்த்தி (07.12.2021)

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகி போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டுமறைந்து நீங்கள் விண்நோக்கி சென்றாலும்
கண்விட்டு மறையாமல் கனகாலம் இருப்பீர்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

39/ A, புலவனார் வீதி,
கல்வியங்காடு.
குடும்பத்தினர்.
(cs.771)(2.6)

## 07 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 03 . 10 . 1932
ஆண்டவன் மடியில் 25 . 11 . 2014

காரைநகர் ஆலடியைச் சேர்ந்த
**அமரர் கணபதிப்பிள்ளை தில்லையம்பலம்**
(இளைப்பாறிய OA வவுனியா கச்சேரி)
திதி: சதுர்த்தி

ஐயா கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாமல்
கனகாலம் இருப்பீர்கள் ஐயா
நினைவில் எம்முடனும்
நிஜத்தில் இறைவனிடமும்
ஐயா நோயுற்று அலறியதில்லை
நொந்து மனம் வாடியதில்லை
வாழ்ந்த காலம் போதுமென்றா
நாடிவந்த எம்மை பாதியிலே
தவிக்கவிட்டு சென்றீர்கள் ஐயா.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஆலடி,
காரைநகர்.
(CS 41391) (3.6)
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்,
குடும்பத்தினர்.


# குருமண்காடு விபத்துத் தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை!

## உறவினர்கள் குற்றச்சாட்டு

வவுனியா, டிசெ. 7

வவுனியா, மன்னார் வீதியில் குருமண்காடுச் சந்திக்கு அருகாக கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற விபத்துத் தொடர்பில், எவரும் கைதுசெய்யப்படவில்லை என்று படுகாயமடைந்த இளைஞனின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வவுனியா, மன்னார் வீதியில் குருமண்காடு சந்திக்கு அண்மையில் கடந்த வியாழக்கிழமை மூன்று மோட்டார் சைக்கிள்கள் ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின. குறித்த விபத்தில் படுகாயமடைந்த இளைஞர் ஒருவர், வவுனியா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகின்றார். விபத்தில் சிக்கிய மூன்று மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கொண்டுசெல்லப்பட்டுள்ளன. எனினும் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞனின் உறவினர்களால் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியிடம் முறைப்பாடொன்று வழங்கப்பட்டது.

இது தொடர்பாக பொலிஸாரிடம் கேட்டபோது, விபத்துக்குள்ளான மூன்று மோட்டார் சைக்கிள்களையும் எமது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வந்துள்ளோம். பாதிக்கப்பட்ட இளைஞன் சுயநினைவு இல்லாமல் இருப்பதால் அவருடைய வாக்குமூலத்தைப் பெறமுடியவில்லை. இருந்தும், நாம் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றோம் - என்றனர். (ம-18)



# வீதியைச் சீரமைத்து பஸ் சேவை நடத்துக

## 4 கிராம மக்கள்கோரிக்கை

சேதமடைந்துள்ள வீதியைப் புனரமைத்து, அக்கராயன்- யாழ்ப்பாணத்துக்கு இடையில் பேருந்துச் சேவையை நடத்த வேண்டும் என்று அக்கராயன், ஸ்கந்தபுரம், முக்கொம்பன், கண்ணகைபுரம் ஆகிய கிராமங்களின் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஸ்கந்தபுரத்துக்கும், முக்கொம்பனுக்கும் இடையிலான மூன்று கிலோமீற்றர் வரையான வீதி சேதமடைந்துள்ளதால், இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துச் சேவை நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அக்கராயன் மகா வித்தியாலயத்துக்குச் செல்லும் மாணவர்கள், ஆசிரியர்கள் நெருக்கடி களை எதிர்கொண்டுள்ளனர்.

குறித்த 3 கிலோமீற்றர் நீளமான வீதியைப் புனரமைத்தால், யாழ்ப்பாணத்துக்கான பேருந்துச் சேவை அக்கராயன் வழியாக நடைபெறும் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஓ-4-13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்புக்கள்

தரம்: 3, 4, 5 மாணவர்களுக்கு அனைத்துப் பாடங்களும் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.

077 311 6202 (cs.784)(2.6)

## வேலையாட்கள் தேவை

யாழ் நகரில் கருவாட்டுக் கடைக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

077 222 8312 தவம் ஸ்ரோர்ஸ் (CS 766)(1/6)

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்து தரப்படும்.

ஒரு சதுர அடி - 45 ரூபா

077 334 1281 (ne 17625)(2.6)


## தவறிவிட்டது

திருநெல்வேலியைச் சேர்ந்த தங்கராசா மோகன் (951300750 V) என்பவருடைய NIC (ஆள் அடையாள அட்டை) தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தந்து உதவவும்.

074 149 8557 (cs.784)(2.6)


# மரண அறிவித்தல்

## துரைச்சாமி ரெங்கசாமி



நுணாவில் மத்தி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி ரெங்கசாமி நேற்று (06.12.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சத்தியபாமா அவர்களின் அன்புக் கணவரும். இராஜேஸ்வரி. ரவிச்சந்திரன். துரைச்சாமி. கண்ணதாசன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்

(cs.775)(2.6)

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை
# வழங்குனர்களையும் ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2022

சபையானது 2022 ஆம் ஆண்டுக்கான கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்குத் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**பொருட்கள்**

01. காகிதாதிகள்.எழுது பொருட்கள்
02. அலுவல்க உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. புடவைவியாபாரம்
05. கட்டடப் பொருட்கள் (சீமெந்து. ஓடுகள். கம்பி வகைகள். கொங்கிறீட் தூண்கள். சீமெந்து கற்கள்
06. கற்கள். மணல். கிரவல்
07. தீந்தைகள் வகைகள் (Paints) . நிறம் தீட்டும் பொருட்கள்
08. நீர் வழங்கும் குழாய்கள். கியூம் பைப்புகள் (Hume Pipe) மற்றும் ஏனைய பொருட்கள்
09. வாகன உதிரிப்பாகங்கள் துணைப் பொருட்கள்
10. மின் வழங்கும் பொருட்கள். மின் பாவனைப்பொருட்கள்
11. எரி பொருட்கள். உராய்வு நீக்கிகள்
12. இரும்பு பொருட்கள்
13. தீராந்திகள். பலகைகள்
14. பனைமரங்கள். சலாகைகள்
15. வாகனங்களுக்கான டயர். ரியூப் மற்றும் மின்கலங்கள்
16. கணனி. பிரதியாக்கல் இயந்திரம். மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்
17. சுத்திகரிப்பு பொருட்கள்.. கிருமி நாசினிகள்
18. பாதணிகள். தோற்பொருட்கள்
19. அலங்காரப்பொருட்கள்
20. இலத்திரனியல் பொருட்கள்

**சேவைகள்**

01. அச்சிடுதல். புத்தகங்கள் கட்டுதல்
02. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்
03. ஒட்டுவேலைகள். உலோக வேலைகள்
04. மின்சாதனங்கள் திருத்தம். மீள மின்வலுவூட்டல் ( Battery Charge)
05. இலத்திரனியல் சாதனங்கள்
06. வாகனங்களின் ரியூப் ஒட்டுதல்
07. வாகன சுத்திகரிப்பு
08. கோலவுடை. சீருடை தைத்தல்
09. கணனி பிரதியாக்கம் இயந்திரம் திருத்தல். சுத்திகரிப்பு(Service)
10. இறப்பர் முத்திரை தயாரித்தல்
11. வாகனங்கள் திருத்தம் செய்தல்.

**ஒப்பந்த வேலைகள் (ICTAD) பதிவு உள்ளவர்கள் மட்டும்)**

01. கட்டட நிர்மாண வேலைகள்
02. கிணறு அமைத்தல்
03. வீதி நிர்மாணம். திருத்த வேலைகள்

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பபடிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் முன் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஒவ்வொரு விண்ணப்பத்திற்கும் பதிவுக்கட்டணமாக ரூபா 1000.00 செலுத்தப்படல் வேண்டும்.

**விண்ணப்பப்படிவங்கள் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "வழங்கல்/ஒப்பந்த சேவைக்கான விண்ணப்பம் - 2022" எனக்குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் செயலாளர், தலைமைக் காரியாலயம் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை. நேரியகுளம் வீதி. நெளுக்குளம், வவுனியா.** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் விண்ணப்படிவங்கள் 21.12.2021 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 024-222 5737 / 024-205 0067 எனும் அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

**செயலாளர்,**
**வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை,**
**வவுனியா.**

(CR.36154)(2.6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
01 . 04 . 1940



இறப்பு
06 . 12 . 2021

## பாலசுப்பிரமணியம் தேவசேனா

புங்குடுதீவு 4ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் 16. சிவகுருநாதர் வீதி. நீராவியடி. யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசுப்பிரமணியம் தேவசேனா அவர்கள் நேற்று (06.12.2021) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் நாகம்மா தம்பதியினரின் மருமகளும். காலஞ்சென்ற பாலசுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான சந்தானலட்சுமி. சந்திரா. கமலநாதன் மற்றும் நகுலராஜன். சகுந்தலா. கமலேஸ்வரி. தேவராணி. துளசிதாசன். தர்மசீலன். காலஞ்சென்ற பாலசுதன் ஆகியோரின் அன்பு தாயாரும். காலஞ்சென்ற தங்கவேலு மற்றும் தங்கராஜா. சாரதா. மோகனதாஸ். குகானந்தன். சுரேகா. மதிவதனா ஆகியோரின் மாமியாரும். காலஞ்சென்றவர்களான வில்வரெத்தினம். விசுவரெத்தினம். பகவத்சிங்கம் மற்றும் கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான சீதாலட்சுமி. செந்திவேல். கணேசு. மருதலிங்கம். இராஜலட்சுமி. கமலாம்பிகை மற்றும் இராசாத்தி. நாகரட்ணம். நவலட்சுமி ஆகியோரின் மைத்துனியும். அஜந்தன் - தர்சினி. சகிலா - தயாபரன். சுகிதா - பிரசாந். அர்ச்சனன். ஹம்சிகா - சஞ்சயன். பிரவீன். கஜித். பிரசாத். கார்த்திகன். துஷிகன் ஆகியோரின் பேர்த்தியும். சனோஜன். ஆரணி. பிரஸ்ரோன். கெரோன். ஆதிஷ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 10.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இல,16, சிவகுருநாதர் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
(CS 773)(3/6)

077 131 3254,
021 222 9073

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு
15 . 07 . 1955



உதிர்வு
05 . 12 . 2021

அமரர்

## சிவசுப்ரமணியம் சிவயோகன் (ரவி)

உரும்பிராய் வடக்கை பிறப்பிடமாகவும். கனடா மொன்றியலை வதிவிடமாகவும் கொண்ட சிவசுப்ரமணியம் சிவயோகன் (ரவி) அவர்கள் 05.12.2021 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்ரமணியம் - மங்கையற்கரசி தம்பதியரின் பாசமிகு மகனும் கோண்டாவிலை சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும். ரஞ்சினிதேவியின் அன்புக்கணவரும் ஜெரணி. மெலணி ஆகியோரின் பாசமிகு தந்தையும். ஜொனி காமேக்கர். அரவிந்தன். விநாயகமூர்த்தி ஆகியோரின் பாசமிகு மாமனாரும். ஆரியா காமேக்கர். அமீலியா காமேக்கர். மைரா அரவிந்தன் ஆகியோரின் அன்பு பேரனும். சாந்தபவானி (உரும்பிராய்). சிவகரன் (கொழும்பு). முரளீகரன் (லண்டன்). சுதாகரன் (மொன்றியல்). சந்திரவதனி (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரனும். சண்முகநாதன் (உரும்பிராய்). பத்மினி (கொழும்பு). பிறேமாவதி (லண்டன்). ரதி (மொன்றியல்). காலஞ்சென்ற பகீரதன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கனடா - மொன்றியலில் இன்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
திருமதி சாந்தபவானி சண்முகநாதன்
021 205 4643
திரு.சிவகரன் சிவசுப்ரமணியம்
077 325 1572

(cs. 778)(2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மக்கள்....

எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைக்காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எந்தவகையிலும் வாழத்தகுதியற்ற நாடாக தற்போதைய அரசாங்கம் இலங்கையை மாற்றியமைத்திருக்கின்றது. எனவே, புதுவருடத்தில் இந்த அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கான செயற்றிட்டத்தை நாமனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுப்பது மிகவும் அவசியமாகும் - என்றும் அவர்மேலும் தெரிவித்தார். (த-இ)

### நேற்றும்....

கிலோமீற்றர் தூரத்தில் மூழ்கியிருந்த நிலையில் குறித்த சடலங்கள் மீட்கப்பட்டன.

வவுனியாவைச் சேர்ந்த மூவர் நேற்று முன்தினம் முல்லைத்தீவுக் கடலில் குளித்துக்கொண்டிருந்தபோது திடீரென்று அலையில் அள்ளிச் செல்லப்பட்டனர். அவர்களுடன் சென்றிருந்த பெண்ணொருவர் அதுபற்றி அங்கிருந்தவர்களுக்குக் கூறியதையடுத்து
மீட்பு நடவடிக்கை துரிதப்படுத்தப்பட்டது. எனினும், சிறிது நேரத்தின் பின்னர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டிருந்தார். ஏனைய இருவரையும் கண்டறியமுடியவில்லை. எனினும், முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தொடர்ந்தும் தேடுதலில் ஈடுபட்டிருந்தனர். இந்தநிலையிலேயே, காணாமற்போயிருந்த இருவரும் நேற்று சடலங்களாக மீட்கப்பட்டனர்.

வவுனியா மதகுவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த மனோகரன் தனுசன்(வயது - 27), தோணிக்கல் வவுனியாவைச் சேர்ந்த விஜயகுமாரன் தர்சன் (வயது - 26), வவுனியா மதகுவைத்தகுளம் பகுதியைச் சேர்ந்த சிவலிங்கம் சகிலன்(வயது - 25) ஆகியோரே கடலில் காணாமற் போயிருந்தநிலையில் சடலங்களாக மீட்கப்பட்டனர்.

வண்ணாங்குளம் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க கடற்றொழிலாளர்கள் 5 படகுகளில் நேற்று கடலில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை, அந்த இளைஞர்கள் நீரில் மூழ்கிய இடத்திலிருந்து சுமார் இரண்டு கிலோமீற்றர் தொலைவில் தீர்த்தக்கரை கடற்கரையில் ஒரு சடலமும் குறித்த இளைஞர்கள் மூழ்கிய இடத்திலிருந்து சுமார் 6 கிலோமீற்றர் தொலைவில் அளம்பில் பகுதியில், மீனவர் ஒருவரின் கரைவலையில் சிக்கிய நிலையில் மூன்றாவது இளைஞனின் சடலமும் மீட்கப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

சடலங்களை கடல்வழியாக மீனவர்கள் முல்லைத்தீவு கடற்கரைக்கு கொண்டு வந்தனர். அவை முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டன.

முல்லைத்தீவுப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். விசாரணைகளின் பின்னர் சடலங்கள் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-19)

### வடக்கு...

மக்கள் பாதிக்கப்படக் காரணம் - என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ்நிர்மலநாதன் குற்றஞ்சாட்டினார். நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாணத்தில் என்.எஸ்.ரி.ஏ. வீட்டுத்திட்டத்தின் ஊடாக 2018, 2019ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட வீடுகள் திட்டமிடல் இல்லாது வழங்கப்பட்டுள்ளன. அப்போது இதற்குப் பொறுப்பாகவிருந்த சஜித் பிரேமதாஸவே வீட்டுத் திட்டங்களை வழங்கியுள்ளார். அவரின் அமைச்சிலுள்ள என்.எஸ்.ரி .ஏ. மாவட்ட முகாமையாளர்கள் ஊடாக கிராம அலுவலர் பிரிவு ரீதியாக திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன.

திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட வீடுகளுக்கு 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா கொடுப்பதாக இருந்தாலும், பயனாளிகளுக்கு குறிப்பிட்ட ஒரு தொகை மட்டுமே வழங்கப்பட்டது. சிலருக்கு 50 ஆயிரம் ரூபாவும் இன்னும் சிலருக்கு 70 ஆயிரம் ரூபாவும் மேலும் சிலருக்கு ஒரு இலட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சரியான திட்டமிடல் இல்லாமல் வழங்கப்பட்டதன் காரணமாக இன்று வடக்கில் மட்டுமல்லாது இலங்கை பூராகவும் பல்லாயிரக்கணக்கான மக்கள் புதிய வீட்டுத்திட்டங்களில் உள்வாங்கப்பட முடியாத நிலையில் உள்ளனர்.

"எங்களுக்குத் தந்த 50 ஆயிரம் ரூபாவை நாம் திருப்பித் தருகின்றோம். புதிய வீட்டுத் திட்டங்களில் எங்களது பெயர்களை உள்வாங்க முடியுமா?" என்று பலர் எம்மிடம் கேட்கின்றார்கள். வீட்டுத்திட்டம் வழங்கும்போது அவர்கள் சிறு குடிசைகளில் இருந்துள்ளார்கள். அவர்களின் குடிசைகளை அகற்றினால்தான் புது வீட்டுத்திட்டம் தருவதாகக் கூறி அகற்றியபின்னர் அடிக்கல் நட்டு நடைமுறைப்படுத்தினார்கள். ஆனால் இன்று அந்த மக்கள் குடிசைகளும் இல்லாமல் வீடும் இல்லாமல் நகைகளை இழந்தும் கட்டடப்பொருள் விற்பனை நிலையங்களுக்கு, ஒப்பந்தகாரர்களுக்கு கடனாளிகளாகவும் இருக்கின்றார்கள். ஆனால் வீடுகள் இன்னும் முற்றுப்பெறவில்லை.

சஜித் பிரேமதாஸவின் காலப்பகுதியில் அவர் முன்மொழிந்து அவருடைய அமைச்சு மூலமாக நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டத்தால் பாதிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான வீட்டுத்திட்டப் பயனாளிகள் வீதிகளில் இருக்கின்றனர். எனினும், தற்போது எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் சஜித் பிரேமதாஸ இன்று கூட (நேற்று) அவர்களுக்கு மிகுதிப்பணத்தை பெற்றுக்கொடுப்பது தொடர்பில் நாடாளுமன்றத்தில் இதுவரையில் பேசவில்லை, கோரிக்கை விடவில்லை.

இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்தவிடம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மிகுதிப் பணத்தை வழங்குமாறு பல முறைகோரிக்கைகளைவிடுத்துள்ளேன். ஏற்கனவே வீட்டுத்திட்டம் உள்ள சிலருக்கும் அந்தப்பணம் கிடைத்துள்ளதால் மிகுதிப்பணத்தை தம்மால் வழங்க முடியாதுள்ளதாக இராஜாங்க அமைச்சர் இந்திக்க அநுருத்த கூறினார். எனவே, மாவட்ட ரீதியில் ஆய்வொன்றை மேற்கொண்டு பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு மிகுதிப்பணத்தை வழங்குமாறு கோருகின்றேன் - என்றார். (த-22)

### 276...

னர் கைதுசெய்துள்ளனர். அவர்கள், மாதகலில், கடந்தவாரம் காணி சுவீகரிப்புக்கு எதிராகப் போராடியவர்கள் என்று கூறப்பட்டுள்ள[illegible] வாங்கும் செய[illegible] பகுதி மக்கள் சந்தேகத்துடன் கேள்வியெழுப்புகின்றனர்.

குறித் இருவரும் கடற்றொழிலுக்குச் சென்றிருந்தநிலையிலேயே மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டப்பட்டுக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில், இளவாலை பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (த-125)

### மருத்துவ.....

சில நாள்களாக கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், குறித்த அதிகாரிக்கு சுகவீனம் ஏற்பட்டதையடுத்து துரித அன்டிஜென் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன்போது அவருக்குக் தொற்று உறு செய்யப்பட்டது. இதனையடுத்து அவரது வீட்டில் அவர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்று சுகாதாரத் தரப்புத் தெரிவித்தது. (த-110)

### புதிய...

டிக்கை எடுத்துள்ளன.

அதற்கமைய, புதிய லிட்ரோ கொள்கலன்களை அடையாளம் காண்பதற்காக, அந்தநிறுவனத்தின் எரிவாயு கொள்கலன்களில் வெள்ளை பின்னணியில் சிவப்பு நிறத்திலான லிட்ரோ நிறுவனத்தின் இலச்சினை கொண்ட பொலித்தீன் சீல் வைக்கப்பட்டுள்ளது.

அவ்வாறே, புதிய லாஃப்ஸ் எரிவாயு கொல்கலன்களில் மஞ்சள் நிறப்பின்னணியில், நீல நிற இலச்சினை கொண்ட பொலித்தீன் சீல் வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும் சில வாரங்களாக லிற்றோ எரிவாயு சிலிண்டர்கள் வெடித்துச் சிதறிவரும் நிலையில், சில நாள்களாக அவற்றை விற்பனைசெய்வதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

### பிணைமுறி...

உள்ளிட்ட பிரதிவாதிகள் 10 பேரை விடுதலை செய்யுமாறு மூவரடங்கிய விசேட மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

அமல் ரணராஜா, நாமல் பலல்லே மற்றும் ஆதித்ய பட்டபெதிகே உள்ளிட்டோர் அடங்கிய மூவரடங்கிய மேல் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற வழக்கு விசாரணைகளில் பிரதிவாதிகள் முன்வைத்த அடிப்படை ஆட்சேபணை தொடர்பிலான உத்தரவைப் பிறப்பித்த நீதிபதிகள் குழாம், பெர்பச்சுவல் ட்ரெஷரீஸ் நிறுவனம் பிரதிவாதியாக பெயரிடப்பட்டுள்ளபோதிலும், தற்போது அந்தநிறுவனம் இல்லை என்பதால் அதற்கெதிரான11 குற்றச்சாட்டுகளை முன்கொண்டு செல்வதற்கான எவ்வித சட்ட ஏற்பாடுகள் இல்லையென தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, பிரதிவாதிகளுக்கு எதிரான 22 குற்றச்சாட்டுக்களில், 11 குற்றச்சாட்டுக்களை நீக்கிக்கொள்வதற்கு நீதிபதிகள் குழாம் தீர்மானித்துள்ளது. (த-இ)

### நாவற்குழியில்....

இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இருவர் படுகாயமடைந்தநிலையில், யாழ்.போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

### கைதடி...

அது அணைக்கப்பட்டது.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் சம்பவ இடத்துக்குச்சென்று பார்வையிட்டனர்.

இதேவேளை - கொடிகாமம் - தவசிகுளம் பகுதி வீடு ஒன்றில், நேற்றுமுன்தினம் எரிவாயு அடுப்பில் தண்ணீர் கொதிக்க வைத்துவிட்டு வெளியே சென்றபோது அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளது. (த-159)

### 2 குழுக்களுக்கிடையே...

லில் 10 பேர் காயமடைந்தனர். அவர்கள் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதோடு, வாள் ஒன்றும் மீட்கப்பட்டது என்று இளவாலைப் பொலிஸார் தெரிவித்தனர்.

உயரப்புலம் மற்றும் வாதமடச்சி பகுதிகளைச் சேர்ந்த இரு குழுக்களிடையே நிலவிய கருத்து முரண்பாடு மோதலாக மாறியது என்று தெரிவிக்கப்படுகின்றது. விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-125)

### கால்வாயில்...

விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில், புளியம்பொக்கணை பகுதியைச் சேர்ந்த ரவிகரன் டிலக்சன் (வயது - 22) என்பவரே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சடலம், கிளிநொச்சி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. டிப்பரில் பயணித்த மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில், அதே மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் தருமபுரம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (த-113)

## 'யாழ்ப்பாணத்துக்கான ஆறு' திட்டம் விரைவில் ஆரம்பம்

'யாழ்ப்பாணத்துக்கான ஆறு' திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது என்று நெதர்லாந்து தூதரகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாண குடாநாட்டுக்கான குடிதண்ணீர் மற்றும் பாசன நீர் வழங்கலுக்காக நெதர்லாந்து அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இது திட்டமிடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## மிருகக்காட்சிச்சாலையில் கொடிய சிவப்பு விஷப்பாம்பு

உலகின் மிகவிஷமுள்ளபாம்புகள் உட்படபலவகையான ஊர்வன இறக்குமதி செய்யப்பட்டு, தெஹிவளையிலுள்ள தேசியமிருகக்காட்சிச்சாலையில் விடப்பட்டுள்ளன. கொரோனா அச்சுறுத்தலுக்குப்பின்னர், தெஹிவளையிலுள்ளதேசிய மிருகக்காட்சிசாலை மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இதையடுத்தேபுதிய வரவாக அங்கு கொடிய விஷமுள்ள சிவப்பு விஷப் பாம்பு விடப்பட்டுள்ளது. இந்த இனம் கிழக்கு ஆபிரிக்காவின் அடர்ந்த காடுகளை பூர்வீகமாகக் கொண்டமிகவும் விஷமுள்ளநாகப்பாம்பாகும். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களைத் தானமாகப்பெற்று பார்வையை இழந்தது பாகிஸ்தான்

## மருத்துவர் நியாஸ் ஆதங்கம்

**கொழும்பு, டிசெ. 7**

**இலங்கை தானமாக வழங்கிய, கண்களைப்பெற்றுள்ள பாகிஸ்தான் இன்று பார்வையை இழந்து விட்டது என்று - பாகிஸ்தானின் முன்னணி கண் மருத்துவர் நியாஸ் ப்ரோஹி வருத்தம் தெரிவித்துள்ளார்.**

சியால்கோட்டில் இலங்கை தொழிற்சாலை முகாமையாளர் பிரியந்த குமார தியவதனவை அடித்துக்கொலை செய்தமை தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

1967ஆம் ஆண்டு முதல் குறைந்தது 35 ஆயிரம் விழிவெண்படலங்களை இலங்கையிடமிருந்து கண்தானமாக பாகிஸ்தான் பெற்றுள்ளது. இலங்கையிடமிருந்து கண்தானம் பெறுவதில் பாகிஸ்தான் முதலிடத்தில் உள்ளது.

உலகின் பல்வேறு நாடுகளுக்கு இலங்கை 83 ஆயிரத்து 200 விழி வெண்படலங்களை நன் கொடையாக வழங்கியுள்ளது. இலங்கையின் நன்கொடைகளில் 40 வீதத்தைப் பாகிஸ்தான் பெற்றுள்ளது. இந்தச் சம்பவத்தால் நாங்கள் வெட்கத்தால் தலைகுனிகிறோம். கண்களைத் தானமாகப்பெற்று நாம் பார்வையை இழந்து விட்டோம் - என்றார். (ம-40)



புத்தளம், சிராம்பியடிப் பகுதியில் வீட்டுத் தோட்டமொன்றில் சுற்றித்திரிந்த மலைப்பாம்பு உயிருடன் பிடிக்கப்பட்டது. வன ஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டுப் பிரிவினருக்கு வழங்கிய தகவலை அடுத்து, அவர்களால் பிடிக்கப்பட்ட 8 அடி நீளமுடைய மலைப்பாம்பு, தற்போது சரணாலயத்தில் விடப்பட்டுள்ளது. (ம-4)

## பிரியந்தவின் குடும்பத்துக்கு நிவாரணம்

கொழும்பு, டிசெ. 7

பாகிஸ்தானில் மிலேச்சத்தனமாக அடித்துப் படுகொலை செய்யப்பட்டு, எரியூட்டப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவின் குடும்பத்தினருக்கு, சகல நிவாரணங்களும் பெற்றுக்கொடுக்கப்படும் என்று - வெளிநாட்டு தொழில் வாய்ப்பு இராஜாங்க அமைச்சர் பியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானிலுள்ள அனைத்து இலங்கையர்களினதும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்த நாட்டு தூதுவருக்கு இலங்கை அரசு அறிவுறுத்தியுள்ளது என்றும் - இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, பிரியந்த குமார தியவடனவின் சம்பவத்தை அடிப்படையாக வைத்து பாகிஸ்தானில் உள்ள இலங்கையர்களின் பாதுகாப்புக்கு எந்தவிதமான அச்சுறுத்தல்களும் ஏற்படாதவாறு அந்த நாட்டு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் பிரதிப் பொதுமுகாமையாளர் மங்கள ரந்தெனிய தெரிவித்துள்ளார். (ம-4)

# முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் பதிவு

## பாடகருக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 7

முஸ்லிம்களுக்கு எதிராக வெறுப்பைத் தூண்டும் வகையில் சமூக வலைத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவு தொடர்பில், பாடகர் இராஜ் வீரரத்னவுக்கு எதிராக பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தாய்நாட்டைப் பாதுகாக்கும் ஒன்றியத்தின் தலைவர், செயலாளர்களால் கையெழுத்திடப்பட்டு, இந்த முறைப்பாடு அனுப்பப்பட்டுள்ளது. பிரியந்த குமாரவின் படுகொலை தொடர்பில் தனது சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள இராஜ், "2019ஆம் ஆண்டு கோத்தாபய தோல்வியடைந்திருந்தால் நாட்டுக்கு இந்த நிலைமையே ஏற்பட்டிருக்கும். இதுவே உண்மை" என்றுள்ளார்.

இந்தப் பதிவானது நாட்டு மக்களை தவறாக வழிநடத்தும். இன, மதங்களுக்கு இடையில் மோதலை உருவாக்கும். இது பொதுமக்களின் அமைதிக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய வெறுப்பைத் தூண்டும் பரப்புரை எனவே இது தொடர்பில் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்த அமைப்பு வலியுறுத்தியுள்ளது. (ம-4)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்

**வேலுப்பிள்ளை சிவயோகன்**

(ஓய்வுநிலை பொறியியலாளர்- முன்னாள் கௌரவ வடக்கு மாகாணசபை உறுப்பினர்)

மண்ணுலகில் 02.02.1951 விண்ணுலகில் 07.11.2021



கடந்த 07.11.2021 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (07.12.2021) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

"ஆயர்பாடி" துன்னாலை மத்தி, கரவெட்டி. (cr.36152) (2.6)

குடும்பத்தினர் 077 229 9939 077 343 3994

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

காரைநகர் களபூமியில் வீட்டுடன் கூடிய 18 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொ.இல:- 077 355 1695 (CS 787) 1-6

**உள்நாடு வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை**

மிக குறைந்த கட்டணத்தில்

UK 1000/= Germany 1300/= France-1400/=

மற்றைய நாடுகளுக்கு விசேட சலுகைகள்.

திருமுருகன் கொம் நெற்

321 K.K.S.Road, Jaffna. 077 755 4528 (CS 790) (1.6)

**மருந்தாளர் தேவை**

யாழ். நகரை அண்டிய 8 வருட கால சேவையை வழங்கிக் கொண்டிருக்கும் மருந்தகத்திற்கு மருந்தாளர் தேவைப்படுகின்றார்.

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

077 850 7323, 075 839 1436 (CS 772) (3/6)

**R.I.B Group of PVT (LTD)**

**யாழ்ப்பாணத்தில் உடனடி வேலை வாய்ப்பு**

- வாகன சாரதிகள் (Heavy Vehicle)
- களஞ்சிய உதவியாளர் (Store helper) - Male
- சமையலாளர் (Cook) - Female (வயது 35-45)

(யாழ். நகரை அண்மித்த பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது)

உரிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்கவும்.

நேரம் - முற்பகல் 10.30 தொடக்கம் மதியம் 12.00 வரை

நேர்முகத்தேர்வு - 08.12.2021 புதன்கிழமை

இடம் - 83, காதி அபூபக்கர் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்பு எண்:-

077 388 3879 (CS 789)1-6

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சுன்னாகம் கந்தரோடை பகுதியில் கணக்கர் வளவு 22 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடி பாதையுடன்.

சுன்னாகம் பஸ் நிலையத்தில் இருந்து 800 m தூரம்.

பார்வையிடும் நேரம்:

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை

(தரகர் தேவையில்லை)

விலை நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு:

077 81 47 389
077 61 47 333



(CS 785) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.